بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ        نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ        وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 1

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 22

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

ஆசிரியர் முஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

29 துல்கஅதா 1437 ஹிஜ்ரி கமரி   4 ஸஹூர் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி   4 ஆகஸ்டு 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நபிமார்களுக்கு உண்மையான முறையில் கீழ்ப்படிந்து நடந்து அவர்கள் மீது அன்பு கொள்ளாமல் உண்மையான உறுதி மற்றும் முழுமையான இறை ஞானத்தால் நிரம்பிய ஈமான் ஒருபோதும் கிடைக்கவே முடியாது.**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

ஆன்மாவை தூய்மைப்படுத்துவது மிகவும் கடினமான இலக்காகும். இரட்சிப்பிற்கான அடித்தளம் ஆன்மாவை தூய்மைபடுத்துவதில் அடங்கி இருக்கின்றது. அல்லாஹ் قَدْ اَفْلَحَ مَنْ زَكّٰهَا எனவே, அதனை (ஆன்மாவை) தூய்மைப்படுத்துபவன் நிச்சயமாக வெற்றி பெறுகின்றான் (91:10) என்று கூறுகின்றான். ஆன்மாவை தூய்மைப்படுத்துவது இறைவனின் அருள் இல்லாமல் நடக்காது. அருளை ஈர்ப்பதற்காக தொன்றுதொட்டே நிர்ணயிக்கப்பட்டுள்ள அவனது சட்டம் இதுவேயாகும். அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடக்க வேண்டும். ஆனால், நாங்களும் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுகின்றோம். நற்செயல்களைச் செய்கின்றோம். தீய செயல்களிலிருந்து விலகியிருக்கின்றோம் என்று கூறுகின்ற அத்தகையோர் உலகில் ஆயிரக்கணக்கில் இருக்கின்றனர். தூதரைப் பின்பற்றுவதற்கான தேவை இல்லை என்பதே உண்மையில் அவர்களின் நோக்கமாக இருக்கின்றது. ஆனால், இது பெரும் தவறாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அத்தகைய எண்ணத்தை மக்களது உள்ளங்களில் உருவாக்குவதும்கூட ஷய்த்தானின் ஒரு பெரும் ஏமாற்று வேலையாகும். அல்லாஹ் சுயமே தனது தூய வேதத்தில் தூய்மையடைவது மற்றும் இறைநேசம் கிடைப்பது ஆகியவற்றிற்கு தூதரைப் பின்பற்றவதை நிபந்தனையாக வைத்துள்ளான். எனவே, சுயமே எனது ஆற்றலின் மூலமாக நான் தூய்மையடைந்து விடுவேன் என்று எவர் வாதம் செய்ய முடியும்? நபிமார்களுக்கு உண்மையான முறையில் கீழ்ப்படிந்து நடந்து அவர்கள் மீது அன்பு கொள்ளாமல் உண்மையான உறுதி மற்றும் முழுமையான இறைஞானத்தால் நிரம்பிய ஈமான் ஒருபோதும் கிடைக்கவே முடியாது. மனித ஆற்றல், மனித யூகம் மற்றும் எண்ணம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட இறை வல்லமையை வெளிப்படுத்துகின்ற மறைவான செய்திகள் அடங்கிய வலுவான முன்னறிவிப்புகள் இல்லாமல் பாவங்களை அழிக்கின்ற நம்பிக்கையும் இறைவனை காட்டுகின்ற உறுதியும் ஒருபோதும், ஒருபோதும் கிடைக்காது. உலகம் தனது உலகியல் பணிகளில் எந்த அளவு மூழ்கி, எந்த அளவு தீவிரமாக அவற்றில் ஈடுபடுகின்றதோ, மேலும் எந்த அளவு உயிரை மாய்த்துக் கொள்கின்ற அபாயகரமான மற்றும் கடினத்திலும் கடினமான முயற்சிகளை தனது உலகிற்காக செய்கின்றேதோ அதே போன்று இறைவன் பக்கமும் முயற்சி செய்து அடி எடுத்து வைத்து இந்த சமயத்தில் இந்த நோக்கத்திற்காக இறைவன் நியமித்துள்ள ஓர் இறை இயக்கத்தின் பக்கம் கவனம் செலுத்தினால் கண்டிப்பாக அல்லாஹ் அவர்களுக்காக கருணையின் அடையாளத்தைக் காட்டுவதற்கு ஆற்றல் பெற்றவனாக இருக்கின்றான். ஆனால், அசல் விஷயம் இதுவாகும். அதாவது மக்கள் இவ்விஷயங்களைப் பொருட்படுத்தாமல் இருக்கின்றனர். அது அல்லாமல் மார்க்க விஷயங்களையும் செயல்களையும் நிறைவேற்றுவதில் என்ன கஷ்டம் இருக்கின்றது? தொழுகைகளை நிறைவேற்றுவதில் எந்தக் கஷ்டமும் இல்லை. தண்ணீர் இருக்கின்றது. ஸஜ்தா செய்வதற்காக நிலம் இருக்கின்றது. தேவைப் -படுவதெல்லாம் கீழ்ப்படிகின்ற ஒரு தூய உள்ளமேயாகும். அதில் இறை நேசத்தின் உண்மையான துடிப்பு இருக்க வேண்டும். பாருங்கள்! எல்லா தொழுகைகளையும் சேர்த்து தொழுவதாக இருந்தால் மேலும் அதற்காகவும் நேரத்தைக் கணிப்பதாக இருந்தால் ஒருவேளை ஒரு மணி நேரத்திற்குள் எல்லா தொழுகைகளையும் நிறைவேற்றி விடலாம். மலம் கழிப்பதற்குக் கூட இவர்கள் செல்கின்றனர். அதே அளவில் தொழுகை பற்றிய மதிப்பு இந்த மக்களது உள்ளங்களில் இருந்தால் இவர்களால் தொழுகையை நிறைவேற்ற முடியும். ஆனால், இஸ்லாம் இந்தக் காலத்தில் மிகவும் ஆபத்தில் இருக்கின்றது என்பது வேதனைக்குரிய விஷயமாகும். முஸ்லிம்கள் உண்மையில் ஈமானின் ஒளியை இழந்து பாக்கியமற்ற நிலையில் இருக்கின்றனர். ஒருவரை அழிக்கக்கூடிய நோய் ஒருவருக்கு வந்து விட்டால் எந்த அளவு கவலை அவரை பற்றிக் கொள்கின்றது. ஆனால், எதன் முடிவு நரகமாக இருக்கின்றதோ அந்த ஆன்மீக தொழுநோய் பற்றி எவருக்கும் கவலையில்லை.

உண்மையில் நம்மிடம் வருவது இறைவனுக்கு முன்னால் செல்வதாகும். உண்மையில் நமக்கு கண்ணியமளிப்பது இறைவன் மற்றும் அவனது தூதரின் வார்த்தைகளுக்குக் கண்ணியமளிப்பதாகும். நம்மை அவன் இறைத் தூதராக நியமித்து 25 வருடங்கள் கழிந்து விட்டன. அவன் என்னை முஜத்தித்தாக (சீர்திருத்தவாதியாக) ஆக்கினான். இக்காலத்திலுள்ள குழப்பங்களைச் சீர்திருத்துவதற்காக அவன் என்னை உலகிற்கு அனுப்பினான். இது நமது நாவளவிலான வாதமாக மட்டும் இருக்கவில்லை. மாறாக, அந்த இறைவன் அத்துடன் தனது ஆயிரக்கனக்கான மகத்தான அடையாளங்களையும் வழங்கினான். நபித்துவத்தின் வழியில் நம்மை அனுப்பினான். ஆனால், மக்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. மாறாக, அதற்கு நேர் மாற்றமாக அவர்கள் என்னை கா∴பிர் என்றும் கொடிய கா∴பிர் என்றும் தஜ்ஜால் என்றும் கூறினர். ஆனால், எந்த இறைவன் என்னை அனுப்பினானோ அவன் எனக்கு எனது உண்மைக்கான அடையாளத்தையும் கூட வெளிப்படுத்திக் காட்டினான். ஒன்றல்ல; இரண்டல்ல. மாறாக, ஆயிரக்கணக்கான அடையாளங்கள் வெளிப்பட்டன. எவ்வளவு கடுமையான வழக்காக இருந்தாலும் இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் இருந்தாலே குற்றம் புரிந்தவருக்கு உலக நீதிமன்றங்களில் மரண தண்டனை கூட தரப்படுகின்றது. ஆனால், இங்கோ ஆயிரக்கணக்கான மக்கள் நமது இந்த அடையாளங்களுக்கு சாட்சிகளாக இருக்கின்றனர். கிழக்கிலிருந்து மேற்கு வரை நமது அடையாளங்களுக்கு சாட்சிகளாகத் திகழ்பவர்கள் இல்லாத எந்த ஓர் இடமும் இல்லை. ஆனால், அவ்வாறிருந்தும் கூட இந்த மக்கள் அவற்றைப் பொருட்படுத்தவில்லை.

அரசாங்கத்தின் ஒரு கடைநிலை ஊழியர் வரி வசூலிப்பதற்காக வந்தால் யாரும் அவரை எதிர்த்து நிற்பதில்லை. அவ்வாறு எதிர்த்தால் அவர் அரசிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்பவராகக் கருதப்படுவார். மேலும் அதற்கான தண்டனை அவருக்கு கிடைக்கின்றது. ஆனால், இறைவனின் அரசாங்கத்தை மக்கள் பொருட்படுத்துவதில்லை. இறைவன் புறமிருந்து வருபவர்கள் ஏழ்மையின் ஆடையில் இருக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. மக்கள் அவர்களை அற்பமாகவும் பரிகாசமாகவும் பார்க்கின்றனர். அவர்களை எள்ளி நகையாடுகின்றனர். ஆனால், அல்லாஹ் يٰحَسْرَةً عَلَى الْعِبَادِ مَا يَاْتِيْهِمْ مِّنْ رَّسُوْلٍ اِلَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ அடியார்களின் பரிதாபமே! எந்தத் தூதர் அவர்களிடம் வந்தாலும் அவர்கள் அவரை ஏளனத்திற்குள்ளாகவே செய்கின்றனர் (36:31) என்று கூறுகின்றான். அல்லாஹ் உண்மையாளன். அவன் பொய் கூறுவதில்லை. ஆதமிலிருந்து இறுதி வரை வந்த நபிமார்கள் அனைவரையும் அவர்கள் பரிகாசம் செய்தனர். ஏளனத்திற்குள்ளாக்கினர் என்று அவன் கூறுகின்றான். ஆனால், காலம் கடந்த பிறகு அந்த நபிமார்களை அவர்கள் புகழ ஆரம்பித்து விடுகின்றனர். ஷேக் அப்துல் காதில் ஜீலானி (ரஹ்) அவர்கள் மீதும் அந்தக் காலத்தில் வாழ்ந்த ஏறக்குறைய நூறு ஆலிம்கள் அவர்கள் கா∴பிர் ஆகி விட்டதாக

*(தொடர்ச்சி 7-வது பக்கம்)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அல்லாஹ்வின் மீது முழுமையாக நம்பிக்கை கொள்வதும், அவன் எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனாக இருக்கின்றான் என்பதைப் புரிந்து கொண்டு அவனிடம் கேட்பதும், அவனது கட்டளைகளுக்கேற்ப செயல்படுவதும் அவசியமானதாகும். அல்லாஹ்வின் என்ன கட்டளைகள் உள்ளன? இதற்காக அல்லாஹ் நமக்கு திருக்குர்ஆனைப் போன்ற மகத்தான வேதத்தை வழங்கியுள்ளான். அதில் அல்லாஹ்வின் எல்லா கட்டடைகளும் உள்ளன. அவன் ஏவிய மற்றும் தடுத்த எல்லா விஷயங்களும் அதில் இருக்கின்றது.

திருக்குர்ஆனில் எண்ணற்ற கட்டளைகள் உள்ளன. அவற்றைச் செய்யும்படி அல்லது செய்யாமல் இருக்கும்படி இறைவன் நமக்கு கட்டளையிட்டுள்ளான். அவற்றை நாம் அவ்வப்போது அலசிப் பார்க்க வேண்டும். அந்தக் கட்டளைகளை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூற வேண்டும். இப்போது நான் சில கட்டளைகளைப் பற்றி கூற இருக்கின்றேன். எல்லாவற்றையும் விட அடிப்படையாக நாம் நமது கண்களுக்கு முன்னால் வைக்க வேண்டிய விஷயம், மேலும் அந்த விஷயம் மனிதனின் படைப்பின் நோக்கமாகவும் இருக்கின்றது. அது இறைவனை வணங்குவதாகும்.

பள்ளிவாசல்களில் ஜமாஅத்தாக தொழுவதும் கூட அல்லாஹ்வின் கட்டளைகளில் ஒரு கட்டளையை நிறைவேற்றுவதேயாகும். எனவே, இந்த ரமலானில் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்களில் எல்லாரையும் விட முன்னே நிற்பவர்களாக நாங்கள் இருப்பதற்கு எங்களது எல்லா ஆற்றல்களின் மூலமாக முயற்சி செய்வோம் என்று உடன்படிக்கை செய்துள்ள ஜமாஅத்திற்காக தமது வாழ்வை அர்ப்பணித்தவர்களும், ஜமாஅத் உறுப்பினர்களின் பார்வை இருந்து வருகின்ற மேலும் நம்மில் சிறந்தவர்களாக அவர்கள் இருக்கின்றனர் என்பதற்காக அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களும் ஒரு முன்மாதிரியாகத் திகழ வேண்டும். ரமலானின் மட்டும் அல்லாஹ் கூறியுள்ள வழிமுறைகளுக்கேற்ப அவர்கள் இறை வணக்கத்தின் பக்கம் வலுவாக ஈடுபடக் கூடியவர்களாக இருக்கக் கூடாது. இன்னும் 12 நாட்கள் இருக்கின்றன அல்லது 13 நாட்கள் இருக்கின்றன என்று அவர்கள் நாட்களை மட்டும் எண்ணக் கூடியவர்களாக இருக்க கூடாது. ரமலானுக்குப் பிறகு நாம் பழைய அன்றாட பணிகளின் பக்கம் வந்து விட வேண்டும் என்ற நிலை இருக்கக் கூடாது. மாறாக, இந்த ரமலானில் கிடைத்த தர்ப்பியத்தும் முயற்சியும் நாம் இறைவணக்கங்களின் பக்கம் கவனம் செலுத்துவதில் எத்தகைய சிறந்த நிலையை உருவாக்கியுள்ளோமோ அதனை நாம் நமது வாழ்வின் நிரந்தர அங்கமாக ஆக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். எனவே, எல்லா வகையான உரிமைகளையும் நாம் செலுத்த வேண்டும்.

நம்மில் ஒவ்வொருவரும் எல்லாவற்றையும் விட நாம் நமது வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும் என்ற கவலைக்கு எல்லாவற்றிற்கும் மேலாக முன்னுரிமை வழங்குபவர்களாக இருக்க வேண்டும். இந்த ரமலானுக்குப் பிறகும் நமது கவனம் இறைவனை வணங்குவதன் பக்கம் இருக்க வேண்டும். இதற்காக பள்ளிவாயில்களை நிரப்ப வேண்டும் என்ற கட்டளையை நாம் கண்முன் நிறுத்த வேண்டும்.

பிறகு இன்னொரு கட்டளை திருக்குர்ஆனில் உள்ளது. அது உடன்படிக்கைகளை நிறைவேற்றுவது மற்றும் வாக்குறுதிகளைப் பேணுவது தொடர்பான கட்டளையாகும். இதில் இறைவனுடன் செய்த உடன்படிக்கையும் இருக்கின்றது.

இந்தக் கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. அதாவது, நம்பிக்கை கொண்ட ஒருவர் தனது எல்லா வாக்குறுதிகளையும் உடன்படிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டும். இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொண்டால் பிறகு எல்லா விதமான சண்டைகளிலிருந்தும் பிறரை ஏமாற்றுவதிலிருந்தும் குற்றச்சாட்டுகளிலிருந்தும் சமுதாயம் தூய்மையடைய முடியும். இதனால் குடும்ப விவகாரங்களில் ஏற்படும் பிரச்சனைகளும் கூட ஒருபோதும் உருவாகாது. அங்கும் கூட, செய்து கொண்ட உடன்படிக்கை முறிக்கப்படுகிறது.

உடன்படிக்கையை மனிதன் முறிக்கின்றபோது அதற்கு ஆதரவாக மனிதன் பொய் பேச ஆரம்பிக்கின்றான். பொய் தொடர்பாக அல்லாஹ் மிகவும் கடுமையாக எச்சரித்தவாறு அதிலிருந்து தவிர்ந்திருக்கும்படி கூறுகின்றான்.

இறையச்சமுள்ளவர்களது ஓர் அடையாளமாக அல்லாஹ் وَالْكَاظِمِيْنَ الْغَيْظَ وَالْعَافِيْنَ عَنِ النَّاسِ அவர்கள் கோபத்தை விழுங்கக் கூடியவர்களாகவும் மக்களை மன்னிக்க கூடியவர்களாகவும் இருப்பர் (3:135) என்று கூறியுள்ளான்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் தவறான எண்ணம், பிறரது குற்றங்களைத் தேடி அலைவது ஆகியவற்றிலிருந்து தவிர்ந்திருக்குமாறும் புறம் பேசாமல் இருக்குமாறும் கட்டளையிட்டுள்ளான்.

எனவே, ரமலானில் அல்லாஹ்விற்கு அஞ்சுவதற்கு நாம் விரும்பும்போது, அவனது நெருக்கம் நமக்கு கிடைக்க வேண்டும் என்று நாம் விரும்பும்போது நமது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதை நாம் பார்க்க விரும்பும் போது நாம் இந்தத் தீமைகளிலிருந்து தவிர்ந்திருந்து அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்படுவதற்கு நாம் அதிகமாக முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக! நாம் அவனது அனைத்து கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டவாறு அவனது நெருக்கத்தைப் பெறக்கூடியவர்களாக ஆவோமாக! மேலும் ரமலானுக்குப் பிறகும் இந்த நன்மைகள் நம்மிடம் நிலைத்திருக்கட்டுமாக! நாம் உண்மையில் அல்லாஹ்வை வணங்கக்கூடியவர்களாக ஆவோமாக! அவனுக்கே முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பவர்களாக நாம் ஆவோமாக!

கராச்சி மாவட்டத்திலுள்ள குல்ஸார் ஹஜ்ரி ஹல்காவைச் சார்ந்த மதிப்பிற்குரிய சவுத்ரி பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான சவுத்ரி கலீக் அஹ்மது சாஹிப் ஷஹீதாகி விட்டார்கள். ஷஹீது மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்**
**24 ஜுன் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **24 இஹ்ஸான்** மாதம் ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّيْنَ.

கடந்த குத்பாவில் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அல்லாஹ்வின் மீது முழுமையாக நம்பிக்கை கொள்வதும், அவன் எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனாக இருக்கின்றான் என்பதைப் புரிந்து கொண்டு அவனிடம் கேட்பதும், அவனது கட்டளைகளுக்கேற்ப செயல்படுவதும் அவசியமானதாகும் என்பதைப் பற்றி நான் கூறியிருந்தேன். அல்லாஹ்வின் என்ன கட்டளைகள் உள்ளன? கடந்த குத்பாவிலும் இதைப் பற்றி கூறப்பட்டிருக்கின்றது. இதற்காக அல்லாஹ் நமக்கு திருக்குர்ஆனைப் போன்ற மகத்தான வேதத்தை வழங்கியுள்ளான். அதில் அல்லாஹ்வின் எல்லா கட்டடைகளும் உள்ளன. அவன் ஏவிய மற்றும் தடுத்த எல்லா விஷயங்களும் அதில் இருக்கின்றது. அல்லாஹ் فَلْيَسْتَجِيْبُوْا لِيْ எனது அடியார்கள் எனது கட்டளையை ஏற்று நடக்க வேண்டும் என்று கூறியுள்ளான். அந்தக் கட்டளைகள் திருக்குர்ஆனில் இருக்கின்றது. அதை அடியார்கள் ஏற்று நடக்க வேண்டும். அதன் விளைவாக அல்லாஹ் துஆக்களையும் கேட்பான். அப்படிப்பட்டவருக்கு நேர்வழியும் கிடைக்கும். அல்லாஹ் இறுதியாக என்ன விளைவு வெளிப்படும்? என்பதைப் பற்றி لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ அதன் மூலமாக அவர்கள் நேர்வழியைப் பெறுவார்கள் என்று கூறுகின்றான். மேலும், இந்த நேர்வழியின்

காரணமாக அவர்கள் எனது நெருக்கத்தின் காட்சிகளைக் காண்பார்கள் என்று கூறுகின்றான். அவர்கள் நேர்வழியில் நடப்பவர்களாக இருக்க வேண்டும். நன்மைகளைச் செய்பவர்களாக இருக்க வேண்டும். தீயவற்றிலிருந்து விலகுபவர்களாக இருக்க வேண்டும். தங்களது படைப்பின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். உயர்வான நல்லொழுக்கத்தைப் பேணியவாறு அவர்களில் ஒருவர் மற்றவரது உரிமையைச் செலுத்துபவராக இருக்க வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள இந்த விஷயங்கள் ரமலானில் மட்டும்தான் தேவைப்படுகின்றதா என்ன? நாம் ரமலானில் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டால் பிறகு நிரந்தரமாக நேர்வழியைப் பெற்றவர்களாக நாம் ஆகி விடுவோமா? ரமலானில் மட்டும் இவற்றைச் செயல்படுத்துவது போதுமானதா? குறிப்பாக ரமலான் இந்த விஷயங்களை நினைவூட்டுவதற்காகவே வந்திருக்கின்றது. தர்பிய்யத் வழங்குகின்ற மற்றும் நாம் முயற்சி செய்கின்ற இந்த மாதத்தில் நாம் நம்மிடம் சீர்திருத்தத்தை ஏற்படுத்தி உழைத்து அல்லது உழைப்பதற்கு முயற்சி செய்து நம்மில் ஒருவர் மற்றவரைப் பார்த்து அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழியை தேட வேண்டும். நம்மில் சிலர் சிறந்த செயல்களை செய்பவர்களாக இருக்கின்றனர். சிறந்த முறையில் இறைவனை வணங்குபவர்களாக இருக்கின்றனர். சிலர் நல்லொழுக்கம் உடையவர்களாக இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் ரமலானில் ஒன்று சேர்கின்றனர். ஒட்டுமொத்தமாக இவர்களில் ஒருவர் மற்றவரைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது. இதன் மூலமாக தமது நிலைமைகளின் பக்கமும் அவர்களுக்கு கவனம் ஏற்படுகின்றது. கூட்டாகவும் தனியாகவும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டு அவனுக்கு அருகில் செல்பவர்களாகவும், நமது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதன் தரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்பவர்களாகவும் நாம் ஆக வேண்டும். அதன் மூலம் நாம் நிரந்தரமாக அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்று நமது இம்மையையும் மறுமையையும் சரி செய்து கொள்பவர்களாக ஆக வேண்டும்.

திருக்குர்ஆனில் எண்ணற்ற கட்டளைகள் உள்ளன. அவற்றைச் செய்யும்படி அல்லது செய்யாமல் இருக்கும்படி இறைவன் நமக்கு கட்டளையிட்டுள்ளான். அவற்றை நாம் அவ்வப்போது அலசிப் பார்க்க வேண்டும். அந்தக் கட்டளைகளை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூற வேண்டும். இப்போது நான் சில கட்டளைகளைப் பற்றி கூற இருக்கின்றேன். எல்லாவற்றையும் விட அடிப்படையாக நாம் நமது கண்களுக்கு முன்னால் வைக்க வேண்டிய விஷயம், மேலும் அந்த விஷயம் மனிதனின் படைப்பின் நோக்கமாகவும் இருக்கின்றது. அது இறைவனை வணங்குவதாகும்.

இதைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்: وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُوْنَ ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த வசனத்தை இவ்வாறு மொழியாக்கம் செய்துள்ளார்கள். "நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன்." **(51:58)** (பராஹீனே அஹ்மதிய்யா மூன்றாவது பாகம், ரூஹானி கஸாயீன் தொகுதி 1, பக்கம் 185, அடிக்குறிப்பு)

இந்தக் கருத்தை நான் பல முறை எடுத்துக் கூறியுள்ளேன். மீண்டும் மீண்டும் இதன் பக்கம் நான் கவனமூட்டிக் கொண்டிருக்கின்றேன். நம்மில் பலரும் இவற்றை சில நாட்கள் வரை நினைவில் வைத்திருக்கின்றோம். பிறகு அதை மறந்து விடுகின்றோம். எதுவரையென்றால், எனது அறிவில் இந்த விஷயம் இருக்கின்றது. நான் இதைப் பார்த்துள்ளேன். தமது வாழ்க்கையை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்தவர்களில் சிலர், இன்னும் சொல்வதென்றால் அவர்கள் மார்க்க அறிவையும் பெற்றவர்களாக இருக்கின்றனர். அறிவின் அடிப்படையில் இதன் முக்கியத்துவத்தைப் புரிந்தவர்களாகவும் அவர்கள் இருக்கின்றனர். அவர்களும் கூட எந்த அளவு கவனம் செலுத்தப்பட வேண்டுமோ அந்த அளவு இதன் பக்கம் கவனம் செலுத்தாமல் இருக்கின்றனர். பிறகு ஜமாஅத்தின் பொறுப்பாளர்கள் இருக்கின்றனர். அவர்கள் கூட்டங்களில் தமது அறிவின் தகுதியை வெளிப்படுத்திக் காட்ட முயற்சி செய்கின்றனர். ஒரு நபரது விவகாரம் அவர்களுக்கு முன்னால் எடுத்து வைக்கப்படும் போது திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியின் அடிப்படையில் அவருக்கு அந்த விஷயத்தை புரிய வைக்கின்றனர். ஆனால், அவர்களில் சிலருக்கு சுயமே இந்த அடிப்படையான கட்டளையின் பக்கம் எந்த அளவு கவனம் இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு இருப்பதில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: "நீங்கள் இந்த விஷயத்தைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களை இறைவன் படைத்ததன் நோக்கம் அவனை நீங்கள் வணங்க வேண்டும் என்பதாகும். நீங்கள் அவனுக்காக ஆகி விடுங்கள். உலகம் உங்களது நோக்கமாக இருக்கக் கூடாது. எனவே, நான் மீண்டும் மீண்டும் இந்த விஷயத்தைக் கூறுகின்றேன். எனது பார்வையில் இந்த விஷயத்திற்காகவே மனிதன் வந்துள்ளான். ஆனால், இந்த விஷயத்திலிருந்துதான் அவன் விலகி தொலைவில் சென்று விட்டான்." (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 183-184; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த விஷயத்தை மேலும் விளக்கிக் கூறியுள்ளார்கள்: "அதாவது உலகை உங்களது நோக்கமாகக் கொள்ளாதீர்கள் என்பதன் பொருள், நீங்கள் உலகப் பணிகளைச் செய்ய வேண்டாம் என்பதல்ல. சந்தேகமின்றி அந்தப் பணிகளையும் செய்யுங்கள். ஆனால், இறைவனை வணங்குவது தொடர்பாக உங்களது பொறுப்புகளுக்கும் இன்னும் சொல்வதென்றால் நீங்கள் படைக்கப்பட்டதன் நோக்கத்திற்கும் நீங்கள் எல்லாவற்றையும் விட முன்னுரிமை வழங்குபவர்களாக இருக்க வேண்டும்."

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இன்றைய நாட்களில் ரமலானின் பொதுவாக இதற்கேற்ப நாம் செயல்படுகின்றோம். மேற்கத்திய நாடுகளில் இரவில் இஷா தொழுகை மிகவும் நேரம் கழிந்த பிறகே தொழப்படுகின்றது. தொழுது முடிக்கும் போது இரவு **11.00** மணி அல்லது **11.15** ஆகி விடுகின்றது. பள்ளிவாசல்களில் தராவீஹ் தொழுகைக்கான ஏற்பாடும் இருக்கின்றது. எனவே, இதற்குப் பிறகு சிலர் தராவீஹ் தொழுகையும் தொழுகின்றனர். வீட்டிற்குச் சென்று தூங்கும்போது இரவு **12.00** மணி அல்லது **12.30** மணி ஆகி விடுகின்றது. பிறகு **2.00** மணி அல்லது **2.30** மணிக்கு சஹர் உணவு உண்பதற்கு எழுகின்றனர். சிலர் நஃபிலான தொழுகையையும் தொழுபவர்களாக இருப்பர். தொழுகைக்காக பள்ளிவாயிலுக்கும் வருகின்றனர். இந்த விஷயம் தொடர்பான அறிவின் முக்கியத்துவத்தைப் பற்றி மட்டும் தெரிந்திருக்காமல் இது பற்றிய உறுதியான எண்ணம் இருந்தால் அத்துடன் செயலளவிலான முயற்சியும் இருந்தால் இறைவணக்கத்தின் சிறந்த நிலையான தொழுகையில் நாம் சோம்பேறித்தனம் காட்ட மாட்டோம். மாறாக, முயற்சி செய்தவாறு இதற்காக வருவோம். பள்ளிவாசல்களில் ஜமாஅத்தாக தொழுவதும் கூட அல்லாஹ்வின் கட்டளைகளில் ஒரு கட்டளையை நிறைவேற்றுவதேயாகும். எனவே, இந்த ரமலானில் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்களில் எல்லாரையும் விட முன்னே நிற்பவர்களாக நாங்கள் இருப்பதற்கு எங்களது எல்லா ஆற்றல்களின் மூலமாக முயற்சி செய்வோம் என்று உடன்படிக்கை செய்துள்ள ஜமாஅத்திற்காக தமது வாழ்வை அர்ப்பணித்தவர்களும், ஜமாஅத் உறுப்பினர்களின் பார்வை இருந்து வருகின்ற மேலும் நம்மில் சிறந்தவர்களாக அவர்கள் இருக்கின்றனர் என்பதற்காக அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களும் ஒரு முன்மாதிரியாகத் திகழ வேண்டும். ரமலானின் மட்டும் அல்லாஹ் கூறியுள்ள வழிமுறைகளுக்கேற்ப அவர்கள் இறை வணக்கத்தின் பக்கம் வலுவாக ஈடுபடக் கூடியவர்களாக இருக்கக் கூடாது. இன்னும் **12** நாட்கள் இருக்கின்றன அல்லது **13** நாட்கள் இருக்கின்றன என்று அவர்கள் நாட்களை மட்டும் எண்ணக் கூடியவர்களாக இருக்க கூடாது. ரமலானுக்குப் பிறகு நாம் பழைய அன்றாட பணிகளின் பக்கம் வந்து விட வேண்டும் என்ற நிலை இருக்கக் கூடாது. மாறாக, இந்த ரமலானில் கிடைத்த தர்ப்பியத்தும் முயற்சியும் நாம் இறைவணக்கங்களின் பக்கம் கவனம் செலுத்துவதில் எத்தகைய சிறந்த நிலையை உருவாக்கியுள்ளோமோ அதனை நாம் நமது வாழ்வின் நிரந்தர அங்கமாக ஆக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் தமது முன்மாதிரிகளை நிலைநாட்ட வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய அந்த மேற்கோளை நான் எடுத்து கூறியிருந்தேன். அதில் இந்த விஷயம்தான் கூறப்பட்டிருக்கின்றது. அவர்கள் எந்த அளவு வேதனையுடன் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் மீண்டும் மீண்டும் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளேன். இது தொடர்பாக அன்னாரது வேறு சில மேற்கோள்களையும் நான் எடுத்து கூறவுள்ளேன். அதில் மேலும் இதற்கு விளக்கம் கிடைக்கின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: "மனிதனைப் படைத்ததில் இறைவனின் நாட்டம் அவனை வணங்குவதாக மட்டும் இருக்கும்போது நம்பிக்கை கொண்டவர் வேறொரு பொருளை முற்றிலும் தனது குறிக்கோளாக ஆக்கிக் கொள்வது அவரது மகிமைக்கு உகந்ததல்ல. நஃப்ஸிற்குரிய உரிமைகளைச் செலுத்துவது ஆகுமானதுதான். ஆனால், நஃப்ஸ் வரம்பை மீறுவது ஆகுமானதல்ல. நஃப்ஸிற்குரிய உரிமைகளைச் செலுத்துவதும் கூட ஏன் ஆகுமானது என்றால் அது முற்றிலும் ஒன்றுமற்றதாக ஆகி விடக் கூடாது என்பதற்காகவேயாகும். நீங்களும் இவற்றை இந்த நோக்கத்திற்காகவே பயன்படுத்த வேண்டும். இறைவணக்கம் செய்வதற்கு தகுதியுடையவர்களாக உங்களை ஆக்குவதற்காக நீங்கள் அவற்றைப் பயன்படுத்த வேண்டும். மாறாக, அதுவே உங்களது அசல் நோக்கமாகவும் குறிக்கோளாகவும் ஆகி விடக் கூடாது." (மல்ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் 248-249; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது) நஃப்ஸிற்குரிய உரிமையைச் செலுத்துவது தொடர்பாக நபிமொழியிலும் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் உங்கள் நஃப்ஸின் மீதும் உங்களுக்கு உரிமை இருக்கின்றது என்று கூறினார்கள். (புகாரி - கிதாபுஸ் ஸவ்ம் பாபு மன் அக்ஸம அஹீஹி லியுஃப்திர ஹதீஸ் எண்.1968)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நஃப்ஸிற்குரிய இந்த உரிமை இருக்கின்றது என்பது சரிதான். ஆனால், அதில் நடுநிலையைப் பேண வேண்டும். நஃப்ஸிற்குரிய ஆகுமான உரிமையைச் செலுத்துங்கள். ஏனென்றால், இந்த உரிமைகளை அல்லாஹ் மனிதனின் இயல்பில் வைத்துள்ளான். எந்நிலையிலும் அவற்றை செலுத்துவது அவசியமானதாகும். அவற்றை நீங்கள் பயன்படுத்தி பயன்பெற வேண்டும். சில புலன்கள் இருக்கின்றன. அவற்றிற்குரிய உரிமைகளைச் செலுத்தாமலும் அவற்றைப் பயன்படுத்தாமலும் இருந்தால் சில புலன்கள் இல்லாமல் ஆகி விடுகின்றன. இது மனிதப் படைப்பின் நோக்கம் அல்ல. மாறாக, இறைவணக்கத்தை நோக்கமாக கொள்வதுடன் இவற்றைப் பயன்படுத்துவதும் அவசியமானதாகும். அல்லாஹ் படைத்துள்ள சிறப்புத் தன்மைகளையும் ஆற்றல்களையும் பயன்படுத்துவது அவசியமானதாகும். அவற்றைப் பயன்படுத்தாமல் இருப்பது அல்லாஹ்விற்கு நன்றிகேடு காட்டுவதாகும். ஒரு சஹாபியா இருந்தார்கள். அவர்களின் நிலை மிகவும்

மோசமானதாக இருந்தது. அவர் தம்மை அலங்காரம் செய்து கொள்ளாமலும் தலையை வாராமலும் இருந்து வந்தார்கள். அவர்கள் இந்நிலையில் இருந்து வருகின்றார்கள் என்பதைப் பற்றி ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் புகார் கூறினார். அதைப் பற்றி அவர்களை அழைத்து பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டபோது எதற்காக நான் தயாராக இருக்க வேண்டும்? எனது கணவர் பகலிலும் இறைவணக்கத்தில் ஈடுபடுகின்றார். இரவிலும் இறைவணக்கத்தில் ஈடுபடுகின்றார் என்று அவர்கள் கூறினார்கள். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களது கணவரை அழைத்து உங்களது நஃப்ஸின் மீதும் உங்களுக்கு உரிமை இருக்கின்றது. உங்களது மனைவியின் மீதும் உங்களுக்கு உரிமை இருக்கின்றது என்று கூறினார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 8, பக்கம் 531, ஹதீஸ் எண். 26839. (முஸ்னது ஹஸ்ரத் ஆயிஷா -ரலி- மத்பூஆ ஆலமுல் குதுப்) எனவே, எல்லா வகையான உரிமைகளையும் நாம் செலுத்த வேண்டும். ஆனால், படைப்பின் நோக்கத்தை எந்நிலையிலும் கண்முன் நிறுத்த வேண்டும். நஃப்ஸிற்குரிய உரிமை செலுத்தப்படும்போது ஆரோக்கியமும் நன்றாக இருக்கும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும்போது இறைவணக்கத்தையும் சரியான முறையில் நிறைவேற்ற முடியும்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறின்றார்கள்: சரியான இடத்தில் பயன்படுத்தப்படாத நிலையில் ஹலாலும் ஹராமாக ஆகி விடுகின்றது. وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنَ என்பதிலிருந்தும் மனிதன் இறை வணக்கத்திற்காக படைக்கப்பட்டுள்ளான் என்பது தெரிகின்றது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக எந்த அளவு பொருள்கள் தேவைப்படுகின்றதோ அதை விட அதிகமாக பெற்றுக் கொண்டால் அந்த பொருள் அவருக்கு ஹலாலாக இருந்தும் கூட வீணானதாக இருப்பதால் அது அவருக்கு ஹராமாகி விடுகின்றது.'' ஒவ்வொரு பொருளையும் ஆகுமான அளவில் பயன்படுத்துவது சரிதான். ஆனால், தேவைக்கு அதிகமாக அதை பயன்படுத்தும்போது ஹலாலும் ஹராமாகி விடுகின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''எந்த மனிதன் இரவு பகலாக இன்பங்களில் மூழ்கி இருக்கின்றானோ அவன் இறை வணக்கத்தின் என்ன உரிமையை செலுத்த முடியும்? நம்பிக்கை கொண்டவர் ஒரு கசப்பான வாழ்க்கையை வாழ்வது அவசியமானதாகும். ஆனால், சொகுசாகவும் உல்லாசமாகவும் தமது வாழ்வை அவர் கழித்தால் அவர் இத்தகைய (கசப்பான) வாழ்க்கையின் பத்தில் ஒரு பகுதியைக் கூட அதாவது ஒரு சிறு பகுதியைக் கூட வாழ முடியாமல் போய் விடுகின்றது.'' (மல்ஃபூஸாத் தொகுதி 7, பக்கம் 68; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு கூறுகின்றார்கள்: ''மனிதப் படைப்பின் அசல் நோக்கம் அவன் தனது இறைவனை அடையாளங்கண்டு கொண்டு அவனுக்கு கீழ்படிந்து நடப்பதாகும். இதை பற்றியே இறைவன் وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنَ நான் ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்க வேண்டும் என்பதற்காகவே படைத்தேன் என்று கூறுகின்றான். ஆனால், வேதனை என்னவென்றால் உலகில் வருகின்ற பெரும்பாலான மக்கள் பருவ வயதை அடைந்த பிறகு தமது கடமையைப் பற்றி புரிவதற்குப் பகரமாக, தமது வாழ்வின் நோக்கத்தையும் குறிக்கோளையும் கண்முன் நிறுத்துவதற்குப் பகரமாக இறைவனைஅவர்கள் கை விட்டு விட்டு உலகின் பக்கம் சாய்ந்து விடுகின்றனர். உலகின் செல்வங்கள் மற்றும் அதன் மதிப்பை எந்த அளவு விரும்பக் கூடியவர்களாக அவர்கள் ஆகி விடுகின்றனர் என்றால், இறைவனுக்கான பங்கு அதில் மிகவும் குறைவாகத்தான் இருக்கின்றது. பல மக்களின் உள்ளங்களிலும் இறைவனைப் பற்றிய சிந்தனையே இருப்பதில்லை. உலக விஷயங்களில் மூழ்கி அதிலேயே தங்களை மாய்த்துக் கொள்கின்றனர். இறைவன் என்று ஒருவன் இருக்கின்றான் என்பதும் கூட அவர்களுக்கு தெரிவதில்லை. எனினும், ரூஹைக் கைப்பற்றுபவர்கள் வந்து உயிரைக் கைப்பற்றும் போது அது பற்றி தெரிய வருகின்றது.'' (அல் ஹகம் 1904 செப்டம்பர் 24 ஆம் தேதி பக்கம் 1, தொகுதி 8, தப்ஸீர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் -அலை- தொகுதி 4, பக்கம் 239) மரண நேரம் வரும்போதுதான் அவர்கள் உலகப் பணிகளிலிருந்து வெளியில் வருகின்றனர். இன்னும் சொல்வதென்றால் பெரும்பாலான உலகவாதிகளின் நிலை எவ்வாறு இருக்கின்றது என்றால் மரண வேளையில் கூட உலகச் செல்வங்கள் பற்றியும் அவற்றைப் பாதுகாப்பது பற்றியும்தான் அவர்களுக்கு கவலை இருக்கின்றது. ஒரு நம்பிக்கைக் கொண்டவரின் நிலை இப்படிப்பட்டதாக இருப்பதில்லை.

ஆனால், ஆரோக்கியமாக இருக்கும்போது பலரும் வாழ்வின் நோக்கமாக இருக்கின்ற இந்த நோக்கத்தை மறந்து உலக நோக்கங்களைத் தேடுவதற்காக அதிகம் கவலைப் படக்கூடியவர்களாக இருக்கின்றனர். எனவே, நம்மில் ஒவ்வொருவரும் எல்லாவற்றையும் விட நாம் நமது வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும் என்ற கவலைக்கு எல்லாவற்றிற்கும் மேலாக முன்னுரிமை வழங்குபவர்களாக இருக்க வேண்டும். இந்த ரமலானுக்குப் பிறகும் நமது கவனம் இறைவனை வணங்குவதன் பக்கம் இருக்க வேண்டும். இதற்காக பள்ளிவாயில்களை நிரப்ப வேண்டும் என்ற கட்டளையை நாம் கண்முன் நிறுத்த வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரிடத்தில் கூறினார்கள்: ''மனிதனின் உள்ளத்தில் இறைவனின் நெருக்கத்தை பெறுவதற்காக ஒரு வேதனை இருக்க வேண்டும். அதன் காரணமாக அவர் இறைவனின் பார்வையில் ஒரு மதிக்கத்தக்க பொருளாக ஆகி விடுகின்றார்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 7, பக்கம் 289; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற வேண்டும் என்ற வேதனை ஏற்படும்போது அல்லாஹ்வின் பார்வையில் அந்த மனிதன் மதிக்கத்தக்க ஒரு பொருளாக ஆகி விடுகின்றான். எனவே, எவர் அல்லாஹ்வின் பார்வையில் மதிக்கத்தக்க ஒரு பொருளாக ஆகி விடுகின்றாரோ அவர்தான் உண்மையான நேர்வழியைப் பெறக்கூடியவராக இருக்கின்றார். அவரே இறைவனின் அன்பைப் பெறக் கூடியவராக இருக்கின்றார். அல்லாஹ் தொழுகை மற்றும் இறைவணக்கம் தொடர்பான கருத்தை வேறு பல இடங்களிலும் எடுத்து கூறியுள்ளான். சூரா அந்நூரில் அல்லாஹ் கூறுகின்றான்:

رِجَالٌ لَّا تُلْهِيهِمْ تِجَارَةٌ وَّلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللّٰهِ وَاِقَامِ الصَّلٰوةِ وَاِيْتَآءِ الزَّكٰوةِ يَخَافُوْنَ يَوْمًا تَتَقَلَّبُ فِيْهِ الْقُلُوْبُ وَالْاَبْصَارُ

இத்தகைய மகத்தான ஆண்களைக் கொடுக்கல் வாங்கல் தொடர்புகளோ வணிகத் தொழிலோ அல்லாஹ்வை நினைவு கூருவதிலிருந்தும் தொழுகையை நிறைவேற்றுவதிலிருந்தும் ஸக்காத்து கொடுப்பதிலிருந்தும் கவனமற்றவர்களாக ஆக்குவதில்லை. உள்ளங்களும் கண்களும் மேலும் கீழுமாக ஆகுகின்ற ஒரு நாளைக் குறித்து அவர்கள் அஞ்சுகின்றனர். **(24:38)**

இந்த வசனத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குறிப்பிட்டிருந்த அத்தகைய மக்களைப் பற்றி கூறப்பட்டிருக்கின்றது. அவர்கள் இறைவனின் பார்வையில் மதிக்கத்தக்க பொருளாக இருக்கின்றனர். எல்லாரையும் விட அதிகமாக இந்தப் பெருமை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களுக்கு கிடைத்தது. அவர்கள் அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர்களாக ஆகி விட்டனர். தமது சஹாபாக்களைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த சஹாபாக்கள் உங்களுக்கு வழிகாட்டக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். எனவே, நீங்கள் அவர்களைப் பின்பற்றிச் செல்லுங்கள் என்று கூறியுள்ளார்கள். (மிஸ்காதுல் மஸாஃபீஹ் தொகுதி 2, பக்கம் 414. கிதாபுல் மனாகிப் பாபு மனாகிபுஸ் ஸஹாபா. அல் ஃபஸ்லுஸ் ஸாலிஸ். ஹதீஸ் எண். 6018. பைருத்திலுள்ள தாருல் குதுப் இல்மிய்யாவில் 2003 -ல் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கம் அளித்தவாறு கூறுகின்றார்கள்: '' ஒரு நபரைப் பற்றி தஷ்கிரத்துல் அவ்லியா – வில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஒரு நபர் ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்து வாங்குவதில் ஈடுபட்டிருந்தார். ஒரு இறைநேசர் அவரை பார்த்தார். தனது கஷ்ஃபின் பார்வையை அவர் மீது செலுத்தினார். இந்த அளவு கொடுக்கல் வாங்கல் இருந்தும் கூட (அவர் வியாபாரம் செய்தார். பணம் வந்தது. பொருள்களைக் கொடுக்கின்றார். வெளிப்படையாக பார்க்கும்போது அவர் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார்). இந்த அளவு கொடுக்கல் வாங்கலும் பணத்தை பெறுவதும் இருந்தும் கூட அவரது உள்ளம் ஒரு நொடிகூட இறைவனை விட்டும் கவனமற்ற நிலையில் இருக்கவில்லை என்பது அப்போது தெரிய வந்தது.'' அவர் வியாபாரமும் அத்துடன் செய்த வந்தார். ஆனால், அல்லாஹ்விடமிருந்து கவனமற்றவராக அவர் இருக்கவில்லை.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அத்தகைய மனிதர்களைப் பற்றியே இறைவன் لَا تُلْهِيهِمْ تِجَارَةٌ وَّلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللّٰهِ எந்தவொரு வியாபாரமும் கொடுக்கல் வாங்கல் தொடர்புகளும் அவர்களை அல்லாஹ்வை நினைவு கூறுவதிலிருந்தும் கவனமற்றவர்களாக ஆக்குவதில்லை. **(24:38)** என்று கூறுகின்றான். சிறப்பு எதில் இருக்கின்றதென்றால் உலகப் பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டும். இறைவனையும் மறந்து விடக்கூடாது. சுமை ஏற்றப்படுகின்ற சமயத்தில் உட்கார்ந்து விட்டு சுமை இல்லாமல் காலியாக இருக்கும்போது நடக்க ஆரம்பித்து விடுகின்ற அந்தக் கழுதை எதற்கு பயன்படப் போகின்றது? அத்தகைய கழுதை புகழ்வதற்குத் தகுதியுடையதல்ல. மலைப் பகுதிகளில் குறிப்பாக கோவேறிக் கழுதைகளை சுமை சுமப்பதற்குப் பயன்படுத்துகின்றனர்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: ''உலகப் பணிகளுக்கு அஞ்சி தனியாக ஒரு மூலையில் சென்று அமர்பவராக ஆகி விடுகின்ற அந்தத் துறவி தனது பலவீனத்தை வெளிப்டுத்துகின்றார்.''

இந்த அம்சமும் நம் முன்னால் இருக்க வேண்டும. இறைவணக்கம்தான் நோக்கமாக இருக்கின்றது. ஆனால், அத்துடன் உலகப் பணிகளையும் செய்ய வேண்டும். எவர்கள் தனியாக ஒரு மூலையில் சென்று அமர்ந்து விடுகின்றனரோ, துறவியாக ஆகி விடுகின்றனரோ அவர்கள் பலவீனத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றனர். இஸ்லாத்தில் துறவறம் இல்லை. பெண்களையும், குழந்தைகளையும் கை விட்டு விட்டு சென்று விடுங்கள் என்று நாம் ஒருபோதும் கூறவில்லை. உலகத் தொழில்களை விட்டு விடுங்கள் என்றும் நாம் கூறவில்லை. மாறாக, வேலை செய்பவர் தனது பணியின் கடமையை நிறைவேற்ற வேண்டும். வியாபாரி தனது வியாபாரப் பணிகளை முழுமையாக செய்ய வேண்டும். ஆனால், மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இது நிபந்தனையாகும். இதற்கான உதாரணம் சுயமே உலகிலேயே இருக்கின்றது. வியாபாரியும் வேலை செய்பவரும் தமது வியாபாரத்தையும் வேலையையும் மிகச் சிறந்த முறையில் செய்து முடிக்கின்றனர். அவ்வாறு இருந்தும்கூட அவர்களுக்கு மனைவி மக்களும் உள்ளனர். அவர்களுக்குரிய உரிமைகளை அவர்கள் சரியாக செலுத்தி விடுகின்றனர். ஒருபுறம் வியாபாரமும், வேலையும் இருக்கின்றது. ஆனால், அவர்கள் குடும்பப் பொறுப்புகளையும் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் மனைவிக்குரிய உரிமைகளையும் சரியாக நிறைவேற்றுகின்றனர். இரண்டு விஷயங்களும் ஒன்றுடன் மற்றொன்று இணைந்தே செல்கின்றது.

அன்னார் கூறுகின்றார்கள்: ''அவ்வாறே மனிதன் இந்த எல்லா விஷயங்களிலும் ஈடுபடுவதுடன் இறைவனுக்குரிய உரிமையையும் செலுத்த

முடியும். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியவாறு மிகவும் சிறந்த முறையில் தனது வாழ்க்கையை கழிக்க முடியும்.'' (மல்ஃபூஸாத் தொகுதி 9, பக்கம் 206-207; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

தொழுகைகளை பாதுகாப்பது தொடர்பாக இறைவன் கூறுகின்றான்:

حٰفِظُوْا عَلَى الصَّلَوٰتِ وَالصَّلٰوةِ الْوُسْطٰى وَقُوْمُوْا لِلّٰهِ قٰنِتِيْنَ உங்கள் தொழுகைகளைப் பாதுகாத்து கொள்ளுங்கள். குறிப்பாக நடுத்தொழுகையைப் பாதுகாத்து கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ்வின் முன்னிலையில் கட்டுப்பட்டு நடப்பவர்களாக நில்லுங்கள். **(2:239)** எந்த ஒரு தொழுகையும் எவ்வகையிலும் ஒருவருக்கு சுமையாக இருந்தாலும் அப்படிப்பட்ட மக்களைப் பற்றிதான் இந்த வசனத்தில் குறிப்பாகக் கூறப்பட்டிருக்கின்றது. இரவில் வெகுநேரம் விழித்திருந்ததன் காரணமாக சோம்பலின் காரணமாக ஃபஜ்ர் தொழுகையில் கலந்து கொள்வது ஒருவருக்கு கஷ்டமாக இருந்தால் அந்த நபருக்கு ஃபஜ்ர் தொழுகைதான் ஸலாத்துல் உஸ்தா – அதாவது நடுத்தொழுகையாக இருக்கின்றது. வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்ற மனிதருக்கு ளுஹர் மற்றும் அஸர் தொழுகைகளைத் தொழுவது கஷ்டமாக இருந்தால் அந்த தொழுகைத்தான் அவரது நடுத்தொழுகையாக இருக்கின்றது. *ஹாபிஸீ* என்பதன் பொருள் ஒரு பொருள் வீணாகுவதிலிருந்து பாதுகாப்பதாகும். எனவே, இந்தத் தொழுகைகளை குறித்த நேரத்தில் நிறைவேற்றும்போதுதான் நம்பிக்கை கொண்டவர் இறைவனுக்கு கட்டுப்படுபவராக இருக்கின்றார். அதற்குரிய உரிமையை செலுத்தியவாறு தொழுகையை அவர் நிறைவேற்றுகின்றார். விரைவாக வந்து உட்கார்ந்து எழும் நிலை அவரிடம் இருக்காது.

பிறகு இன்னொரு கட்டளை திருக்குர்ஆனில் உள்ளது. அது உடன்படிக்கைகளை நிறைவேற்றுவது மற்றும் வாக்குறுதிகளைப் பேணுவது தொடர்பான கட்டளையாகும். இதில் இறைவனுடன் செய்த உடன்படிக்கையும் இருக்கின்றது. அடியார்களுடன் செய்த உடன்படிக்கையும் இருக்கின்றது. அல்லாஹ்வுடன் செய்து கொண்ட உடன்படிக்கை மார்க்கம் தொடர்பானதாகும். முஸ்லிமாக இருப்பது மற்றும் குறிப்பாக அஹ்மதிகளாகிய நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் செய்து கொண்ட பைஅத் உடன்படிக்கையில் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதாக நாம் உடன்படிக்கை செய்துள்ளோம். இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப செயல்படுவதாக நாம் உடன்படிக்கை செய்துள்ளோம். இந்த அனைத்து விஷயங்களையும் பேணுவதாக நாம் உடன்படிக்கை செய்துள்ளோம். அவை அல்லாஹ்விற்குரிய உரிமையைச் செலுத்துவதன் பக்கம் நமக்கு கவனமூட்டுகின்றது. பைஅத் நிபந்தனைகளில் இந்த எல்லா விஷயங்களும் வந்து விடுகின்றது. இறைவனின் அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதன் பக்கமும் நமக்கு கவனமூட்டப்பட்டிருக்கின்றது. இதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: وَاَوْفُوْا بِعَهْدِ اللّٰهِ اِذَا عٰهَدْتُّمْ وَلَا تَنْقُضُوا الْاَيْمَانَ
بَعْدَ تَوْكِيْدِهَا وَقَدْ جَعَلْتُمُ اللّٰهَ عَلَيْكُمْ كَفِيْلًا ۗ اِنَّ اللّٰهَ يَعْلَمُ مَا تَفْعَلُوْنَ

மேலும், அல்லாஹ்விடம் நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கைகளை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை உங்கள் பொறுப்பாளியாக்கி சத்தியங்களை உறுதிப்படுத்திய பின்னர் அவற்றை முறிக்காதீர்கள். அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். **(18:92)**

இது மிகவும் தெளிவான கட்டளையாகும். அதாவது, நீங்கள் செய்த இரண்டு உடன்படிக்கைகள் இருக்கின்றன. ஒன்று, அல்லாஹ்வுடன் செய்துள்ள உடன்படிக்கையாகும். அது இஸ்லாத்தின் போதனைகளுக்கேற்ப உறுதியாக நடப்போம் என்ற உடன்படிக்கையாகும். பிறகு பைஅத் உடன்படிக்கையாகும். அதாவது, நான் இஸ்லாத்தில் இணைந்து என்னை முஸ்லிம் என்று கூறிக் கொண்டு அல்லாஹ்வின் எல்லா கட்டளைகளுக்கும் ஏற்ப செயல்படுவேன் என்ற உடன்படிக்கையாகும். மற்றொன்று, பரஸ்பரம் உங்களில் ஒருவர் மற்றவருடன் செய்து கொண்ட வாக்குறுதியாகும்; உடன்படிக்கையாகும். அவற்றையும் நிறைவேற்ற வேண்டும்.

அல்லாஹ் இங்கு கூறுகின்றான்: நீங்கள் அல்லாஹ்வை பொறுப்பாளியாக ஆக்கியுள்ளீர்கள். எனவே, இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவது உங்களுக்கு அவசியமானதாகும். எங்கு தெளிவாக அல்லாஹ்வின் பெயர் கூறப்பட்டு அவனை பொறுப்பாளியாக ஆக்கிக் கொள்ளவில்லையோ அங்கு, தான் செய்த உடன்படிக்கையை முறிப்பதில் எந்தக் குற்றமும் இல்லை என்று ஒருபோதும் இதற்கு பொருளல்ல. உங்கள் சத்தியங்களை முறித்துக் கொண்டால் உடன்படிக்கைகளை முறித்து விட்டால் அதில் எந்தக் குற்றமும் இல்லை என்பது இதற்கு பொருளல்ல. மாறாக, நீங்கள் அளிக்கின்ற ஒவ்வொரு வாக்குறுதியும், நீங்கள் செய்து கொள்கின்ற ஒவ்வொரு உடன்படிக்கையும் முதலாவதாக உண்மையின் அடிப்படையில் இருக்க வேண்டும். ஏனென்றால், நம்பிக்கை கொண்ட ஒருவர் நீதியிலும் உண்மையிலும் நிலைத்திருப்பது அவசியமானதாகும். வேறு சொற்களில் நாம் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து அல்லது அவனைப் பொறுப்பாளியாக்கி உடன்படிக்கை செய்தாலும் செய்யா விட்டாலும் நீங்கள் நீதியிலும் உண்மையிலும் நிலைத்திருங்கள் என்பது அல்லாஹ்வின் போதனையாக இருப்பதால், நீதி மற்றும் உண்மையின் அடிப்படையில் எந்த உடன்படிக்கை செய்யப்பட்டாலும் அது அல்லாஹ்வின் பொறுப்பின் கீழ் வந்து விடும். எனவே, இந்தக் கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. அதாவது, நம்பிக்கை கொண்ட ஒருவர் தனது எல்லா வாக்குறுதிகளையும் உடன்படிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டும். இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொண்டால் பிறகு எல்லா விதமான சண்டைகளிலிருந்தும் பிறரை ஏமாற்றுவதிலிருந்தும் குற்றச்சாட்டுகளிலிருந்தும் சமுதாயம் தூய்மையடைய முடியும். இதனால் குடும்ப விவகாரங்களில் ஏற்படும் பிரச்சனைகளும் கூட ஒருபோதும் உருவாகாது. அங்கும் கூட, செய்து கொண்ட உடன்படிக்கை முறிக்கப்படுகிறது. ஏனென்றால், இன்றைய நாட்களில் நான் பார்க்கின்றேன். உலகப் பேராசைகளின் காரணமாக உடன்படிக்கைகள் முறிக்கின்ற, ஏமாற்றுகின்ற, நாவால் கூறிய உறுதிமொழியை நிறைவேற்றாமல் இருக்கின்ற விவகாரங்கள் நம்மிடையே அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. இந்த விஷயங்களால் ஜமாஅத்திற்கு அவப்பெயர் ஏற்படுவது மட்டுமல்லாமல் சில நேரங்களில் அப்படிப்பட்ட மக்களது ஈமானும் வீணாகி விடுகின்றது. உடன்படிக்கையை மனிதன் முறிக்கின்றபோது அதற்கு ஆதரவாக மனிதன் பொய் பேச ஆரம்பிக்கின்றான்.

பொய் தொடர்பாக அல்லாஹ் மிகவும் கடுமையாக எச்சரித்தவாறு அதிலிருந்து தவிர்ந்திருக்கும்படி கூறுகின்றான். அல்லாஹ் கூறுகின்றான்: فَاجْتَنِبُوا الرِّجْسَ مِنَ الْاَوْثَانِ وَاجْتَنِبُوْا قَوْلَ الزُّوْرِ நீங்கள் சிலைகளின் அசுத்தத்திலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். பொய் பேசுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள். **(22:31)**

இதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நீங்கள் கொலை செய்யக் கூடாது என்றோ இரத்தம் சிந்தக் கூடாது என்றோ இதுபோன்ற போதனையை உங்களுக்கு கூற வேண்டிய தேவை எனக்கு இல்லை. ஏனென்றால், மிகவும் தீயவராக இருக்கின்ற ஒருவரைத் தவிர எவர் ஒருவரைக் கொலை செய்ய முன் வருவார்? அநீதியில் நிலைத்திருந்தவாறு உண்மையைக் கொலை செய்து விடாதீர்கள் என்றே நான் கூறுகின்றேன். ஒரு சிறுவன் கூறிய விஷயமாக இருந்தாலும் கூட உண்மையை ஏற்றுக் கொள்ளுங்கள்.'' ஒரு சிறுவன் உண்மையான விஷயத்தைக் கூறினாலும் அதை ஏற்றுக் கொள்ளுங்கள். அதை மறுப்பதில் பிடிவாதமாக இருக்காதீர்கள். ''எதிரி உண்மையைக் கூறுவதைக் கண்டால் உடனடியாக உங்களது காய்ந்து போன லாஜிக்கை கை விட்டு விடுங்கள்.'' சண்டைகள் ஏற்படும்போது எதிரியின் பக்கம் உண்மை இருப்பதைக் கண்டால் பிறகு விவாதம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தனது லாஜிக்கை வெளிப்படுத்திக் காட்ட வேண்டிய தேவை இல்லை. உண்மையை ஏற்றுக் கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையில் நிலைத்திருங்கள். உண்மையான சாட்சியைக் கூறுங்கள். இதைப் பற்றி அல்லாஹ் ஜல்ல ஷானுஹூ கூறுகின்றான்: فَاجْتَنِبُوا الرِّجْسَ مِنَ الْاَوْثَانِ وَاجْتَنِبُوْا قَوْلَ الزُّوْرِ அதாவது, சிலைகளின் அசுத்தத்திலிருந்து தவிர்ந்திருங்கள். பொய் பேசுவதிலிருந்தும் தவிர்ந்திருங்கள். **(22:31)** ஏனென்றால், பொய் சிலையை விட குறைந்த ஒன்றல்ல. எந்த விஷயம் உண்மையின் கிப்லாவிலிருந்தும் உங்கள் முகத்தைத் திருப்புகின்றதோ அது உங்கள் வழியில் இருக்கின்ற சிலையாகும். உங்களது தந்தையர்க்கும் சகோதரர்களுக்கும் நண்பர்களுக்கும் எதிராக அமைந்தாலும் உண்மையான சாட்சியைக் கூறுங்கள். எந்தவொரு பகைமையும் உங்களை நீதியுடன் நடப்பதிலிருந்தும் தடுத்து விட வேண்டாம். (இஸாலே அவ்ஹாம் ரூஹானீ கஸாயின் தொகுதி 3, பக்கம் 550)

அந்நியர்களுக்கு நாம் இந்த விஷயங்களைக் கூறுகின்றோம். திருக்குர்ஆனின் இந்தப் போதனையைக் காட்டுகின்றோம். இது நீதி பற்றிய போதனையாகும் என்று கூறுகின்றோம். ஆனால், நமது சொந்த விவகாரங்கள் வரும்போதும் நம்மில் பெரும்பாலார் இந்தப் போனையை மறந்து விடுகின்றோம்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இறைவன் சிலை வணக்கத்துடன் இந்தப் பொய்யையும் சேர்த்துள்ளான். முட்டாளாக இருக்கும் மனிதன் அல்லாஹ்வை விட்டு விட்டு கற்களுக்கு முன்னால் தலை குனிவது போன்றே மனிதன் உண்மையையும் நேர்மையையும் கை விட்டு விட்டு தனது நோக்கத்தை அடைவதற்காக பொய்யை சிலையாக ஆக்கிக் கொள்கின்றான். இதன் காரணமாகவே அல்லாஹ் அதனை சிலை வணக்கத்துடன் சேர்த்துக் கூறியுள்ளான். அதனுடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றான். எவ்வாறு சிலையை வணங்குபவன் சிலை மூலமாக இரட்சிப்பைப் பெற விரும்புகின்றாரோ (அதாவது சிலை வணக்கம் செய்பவர் நான் சிலையிடம் சென்று வேண்டினால் எனக்கு இரட்சிப்பு கிடைக்கும். எனது பாவங்களை மன்னிக்கும்படி கூறினால் எனது பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும் என்று கருதுகின்றான். எனது பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்று கருதுகின்றான்.)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எத்தகைய தீங்கு உருவாகி இருக்கின்றது. நீங்கள் ஏன் சிலையை வணங்குகின்றீர்கள்? இந்த அசுத்தத்தை விட்டு விடுங்கள் என்று அவர்களிடம் கூறினால் நாங்கள் ஏன் அவற்றைக் கை விட வேண்டும்? அவை இல்லாமல் எங்களால் வாழ முடியாது என்று அவர்கள் கூறுகின்றனர். இதை விட பெரிய துர்பாக்கிய நிலை வேறு எதுவாக இருக்க முடியும்? அதாவது பொய்யையே அவர்கள் தமது அடித்தளமாகக் கருதுகின்றனர். ஆனால், நான் உங்களுக்கு உறுதி அளிக்கின்றேன். இறுதியில் உண்மையே வெற்றி பெறும்; நன்மையும், வெற்றியும் அதற்கு தான் கிடைக்கும். உறுதியாக நினைவில் கொள்ளுங்கள். பொய்யைப் போன்ற மோசமான ஒன்று வேறு எதுவுமே இல்லை. உண்மை பேசுபவர்கள் கைது செய்யப்படுகின்றனர் என்று

பொதுவாக உலகவாதிகள் கூறுகின்றனர். ஆனால், நான் அதை எவ்வாறு எற்றுக் கொள்ள முடியும்? என் மீது ஏழு வழக்குகள் தொடரப்பட்டன. ஆனால், இறைவனின் அருளால் எந்த ஒரு வழக்கிலும் பொய்யான ஒரு வார்த்தையைக் கூட கூற வேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டதில்லை. இந்த வழக்குகளில் ஏதாவது ஒன்றில் நான் தோல்வியைத் தழுவியதாக எவராவது கூற முடியுமா? அல்லாஹ் சுயமே உண்மை பேசுபவர்களுக்கு ஆதரவளிப்பவனாகவும் அவர்களுக்கு உதவி செய்பவனாகவும் இருக்கின்றான். அவன் உண்மையாளர்களுக்கு தண்டனையும் வழங்கலாம் என்பது எப்படி சாத்தியமாகும்? அவ்வாறு இருந்தால் உலகில் உண்மை கூறுவதற்கான தைரியம் எவருக்கும் வராது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''பிறகு இறைவன் மீதுள்ள நம்பிக்கையும் பற்றும் இல்லாமல் ஆகி விடும். உண்மையாளர்கள் உயிருடன் இருக்கும் நிலையிலேயே மரணித்து விடுவர். அசல் விஷயம் என்னவென்றால், உண்மை கூறுவதனால் எவர்களுக்கு தண்டனை கிடைக்கின்றதோ அது உண்மையைக் கூறியதன் காரணமாக கிடைத்த தண்டனை அல்ல. அந்தத் தண்டனை அவர்கள் செய்திருந்த மறைவிலும் மறைவாக இருக்கக்கூடிய வேறு தீமைகளின் காரணமாக அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் வேறு சந்தர்ப்பத்தில் கூறிய பொய்யிற்கான தண்டனையாக அது இருக்கும். இறைவனுக்கு இவர்கள் தொடர்ச்சியாக செய்த தீமைகள் பற்றி தெரியும். அவர் பல தவறுகளை செய்திருக்கின்றார். அந்த தவறுகளில் ஏதாவது ஒன்றிற்கான தண்டனையை அவர் பெறுகின்றார். (அஹ்மதி அவர் கைர் அஹ்மதி மே கியா ∴பரக்ஹே ரூஹானீ கஸாயின் தொகுதி 20, பக்கம் 478-480) எனவே, அல்லாஹ்வின் முன்னிலையில் எப்போதும் பணிவுடன் குனிந்தவாறு நமது பாவங்களுக்காக நாம் அவனிடம் மன்னிப்பு கேட்டு கொண்டிருக்க வேண்டும். மறைவாக செய்த ஏதாவதொரு பாவத்தின் காரணமாக நாம் அல்லாஹ்வின் பிடியின் கீழ் வந்துவிடக் கூடாது.

ஹுஸூர் அவர்கள் கூறுகின்றார்கள்: இறையச்சமுள்ளவர்களது ஓர் அடையாளமாக அல்லாஹ் وَالْكَاظِمِيْنَ الْغَيْظَ وَالْعَافِيْنَ عَنِ النَّاسِ அவர்கள் கோபத்தை விழுங்கக் கூடியவர்களாகவும் மக்களை மன்னிக்க கூடியவர்களாகவும் இருப்பர் **(3:135)** என்று கூறியுள்ளான். 'அஃபூ' என்பதன் பொருள் தனக்கு எதிராக செய்யப்பட்ட குற்றத்தை முழுவதுமாக மறந்து விட்டு ஒருவரை மன்னிப்பதாகும். எனவே, இறையச்சமுடையவர்கள் கோபத்தை விழுங்குபவர்களாக மட்டும் அல்லாமல் பிறரை மன்னிக்கக் கூடியவர்களாகவும் இருப்பர். எவர் அவருக்கு எதிராக குற்றம் புரிந்திருந்தாலும் அதை முழுமையாக அவர் மறந்து விட்டது போன்று அவரது மன்னிப்பு இருக்க வேண்டும்.

இதற்கு விளக்கமளித்தவாறு கோபத்தை விழுங்கி விடுவதன் மூலம் என்ன பயன்கள் கிடைக்கின்றன? என்பதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''நினைவில் கொள்ளுங்கள். அறிவிற்கும் ஆத்திரத்திற்கும் இடையில் கடுமையான பகைமை இருக்கின்றது. ஆத்திரமும் கோபமும் வரும்போது அறிவு நிலைத்திருக்காது. எவர் பொறுமையைக் கடைபிடித்து சகிப்புத் தன்மையின் முன்மாதிரியைக் காட்டுவாரோ அவருக்கு ஓர் ஒளி வழங்கப்படுகின்றது. அதன் மூலமாக அவரது அறிவு மற்றும் சிந்திக்கும் ஆற்றலில் ஒரு புதிய பிரகாசம் உருவாகி விடுகின்றது. பிறகு ஒளியிலிருந்து ஒளி பிறக்கின்றது. கோபம் மற்றும் ஆத்திரமடைந்த நிலைமையில் உள்ளமும் மூளையும் இருள் நிறைந்ததாக இருப்பதால் பிறகு இருளிலிருந்து இருளே பிறக்கின்றது.'' (மல்∴பூஸாத் தொகுதி 3, பக்கம் 180; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிரிதோரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். எவர் கடுமை காட்டுகின்றாரோ, கோபப்படுகின்றாரோ அவரது நாவிலிருந்து இறை ஞானமிக்க விஷயங்கள் ஒருபோதும் வெளி வராது. அவரது உள்ளம் ஞானமிக்க விஷயங்களிலிருந்து விலக்கி வைக்கப்படுகின்றது. தனது எதிரில் இருப்பவருக்கு முன்னால் எவர் விரைவாக ஆத்திரமடைந்து விடுகின்றாரோ அவர் தனது கட்டுப்பாட்டை இழந்து விடுகின்றார். அழுக்கு நிறைந்த எண்ணங்களை உடையவராகவும் கடிவாளமில்லாதவராகவும் அவர் ஆகி விடுகின்றார். அதன் காரணமாக உண்மைகளின் நீரூற்றிலிருந்து அவர் விலக்கி வைக்கப்படுகின்றார்.'' தீய எண்ணங்கள் உருவாகும்போது, நாவிலிருந்து தீய சொற்களும் ஏச்சுப் பேச்சுகளும் வெளிப்படும்போது பிறகு அவரை யாரும் தடுக்க முடியாது. பிறகு அவரது நாவு இறைவனுக்கு பிரியமான நன்மையான விஷயங்களைக் கூறுவதிலிருந்தும் விலகி விடுகின்றது. பிறகு இத்தகைய மக்கள் எப்போதும் தீய விஷயங்களையே கூறுகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்: '' கோபமும் ஞானமும் ஒன்று சேர முடியாது. எவர் கோபத்தில் மூழ்கி விடுகின்றாரோ அவரது அறிவு கூர்மையற்றதாக ஆகி விடுகின்றது. அவரது மூளை மழுங்கி விடுகின்றது.'' பிறகு அப்படிப்பட்டவரிடம் சிந்தித்துப் புரிகின்ற திறனே இல்லாமல் ஆகி விடுகின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இப்படிப்பட்டவருக்கு எந்தவொரு களத்திலும் வெற்றியும் உதவியும் தரப்படாது. கோபம் பாதி பைத்தியமாகும். அது கொழுந்து விட்டு எரியும் போது ஒருவரை முழு பைத்தியமாக ஆக்கி விடலாம்.'' (அல் ஹகம் 1903 மார்ச் 10 ஆம் தேதி பக்கம் 8, தொகுதி 7, எண்.9, த∴ப்ஸீர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் -அலை- தொகுதி 2, பக்கம் 153)

பிரிதொரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஆண் தனது ஆற்றலை பொருத்தமான இடத்திலும் ஆகுமான சந்தர்ப்பத்திலும் பயன்படுத்த வேண்டும். உதாரணமாக, கோபப்படுகின்ற ஆற்றல் இருக்கின்றது. ஆனால், அது தனது வரம்பைக் கடந்து அதிகமாகும்போது அது பைத்தியத்திற்கான முன்னோடியாக ஆகி விடுகின்றது. பைத்தியத்திற்கும் இதற்கும் மிகவும் சிறிய வித்தியாசம்தான் உள்ளது.'' அதாவது கோபத்திற்கும் பைத்தியத்திற்கும் இடையில் மிகச் சிறிய வித்தியாசம்தான் இருக்கின்றது. ''எவர் கடுமையாக கோபப்படுகின்றாரோ அவரிடமிருந்து ஞானத்தின் நீரூற்று பறிக்கப்படுகின்றது. இன்னும் சொல்வதென்றால், ஒருவர் எதிரியாக இருந்தாலும் அவரிடம் கூட கோபத்துடன் பேசக்கூடாது. (மல்∴பூஸாத் தொகுதி 5, பக்கம் 208; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அல்லாஹ்வின் கட்டளைகள் நமது ஒழுக்கத்தை மேம்படுத்தி நமக்கு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தருகின்றது. அத்துடன் நமது அறிவுக்கும் அது ஒளியை வழங்குகின்றது. இதன் மூலமாக பல பகைமைகளிலிருந்தும் இழப்புகளிலிருந்தும் மனிதன் தப்பித்து விடுகின்றான். பெரும்பாலும் கோபப்படக் கூடியவர்களுக்கும் சண்டையிடுபவர் –களுக்கும் இழப்பு ஏற்பட்டுள்ளதைத்தான் காண முடிந்துள்ளது. பலன் கிடைத்ததைக் காண முடியவில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ''இரண்டு ஆற்றல்கள் மனிதனை பைத்தியமாக ஆக்கி விடுகின்றது. அவை என்ன? ஒன்று தவறான எண்ணம் கொள்வது; மற்றொன்று கோபப்படுவது. இந்த இரு ஆற்றல்களும் அதன் உச்சத்தை அடையும்போது அவை மனிதனை பைத்தியமாக்கி விடுகின்றது. எனவே, அதிகமாக மனிதன் தவறான எண்ணத்தில் இருந்தும் கோபத்திலிருந்தும் தவிர்ந்திருப்பது மிகவும் அவசியமானதாகும்'' என்று அன்னார் கூறினார்கள். (மல்∴பூஸாத் தொகுதி 6, பக்கம் 104; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) தவறான எண்ணத்திலிருந்து தவிர்ந்திருக்கும்படி அல்லாஹ் நமக்கு திருக்குர்ஆனிலும் கட்டளையிட்டிருக்கின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اجْتَنِبُوْا كَثِيْرًا مِّنَ الظَّنِّ ـ اِنَّ بَعْضَ الظَّنِّ اِثْمٌ وَّ لَا تَجَسَّسُوْا وَ لَا يَغْتَبْ بَّعْضُكُمْ بَعْضًا ـ اَيُحِبُّ اَحَدُكُمْ اَنْ يَّاْكُلَ لَحْمَ اَخِيْهِ مَيْتًا فَكَرِهْتُمُوْهُ ـ وَ اتَّقُوا اللّٰهَ ـ اِنَّ اللّٰهَ تَوَّابٌ رَّحِيْمٌ

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமாக யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடி அலையாதீர்கள். உங்களுள் ஒருவொருக்கொருவர் புறங்கூறாதீர்கள். உங்களுள் எவராவது மரணமடைந்து விட்ட தம் சகோதரரின் மாமிசத்தை உண்ண விரும்வுவாரா? நீங்கள் நிச்சயமாக அதனை கடுமையாக வெறுக்கின்றீர்கள். மேலும், அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அல்லாஹ் அதிகமாக பாவமன்னிப்புக் கோரப்படுவதை ஏற்றுக் கொள்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். **(49:13)**

இந்த வசனத்தில் முதலாவதாக நாம் தவிர்ந்திருக்கும்படி கட்டளையிடப்பட்ட விஷயம் தவறான எண்ணமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தவறான எண்ணம் கொள்வது எத்தகைய நோயாகவும் எத்தகைய மோசமான தீமையாகவும் இருக்கின்றது என்றால் அது மனிதனை குருடனாக்கி அவனை அழிவின் இருள் நிறைந்த கிணற்றில் விழ வைத்து விடுகின்றது. (மல்∴பூஸாத் தொகுதி 1, பக்கம் 100; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு கூறுகின்றார்கள்: எல்லா தீமைகளும் மோசமான நிலைமைகளும் தவறான எண்ணத்தால் உருவாகின்றது. இதனாலேயே அல்லாஹ் இதை மிகவும் தடுத்துள்ளான். மனிதன் அதிகமாக தவறான எண்ணங்களிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். ஒருவரைப் பற்றி தீய எண்ணம் உருவாகினால் அதிகமாக இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும்.'' ஒருவரைப் பற்றி தீய எண்ணம் மற்றும் தவறான எண்ணம் உருவானால் அதைப் பற்றி சிந்தித்து அதற்கு தனது உள்ளத்தில் இடமளிப்பதற்குப் பகரமாக அதன் காரணமாக ஒருவர் மற்றவருக்கு இழப்பை ஏற்படுத்துவதற்குப் பகரமாக எவரைப் பற்றியாவது தவறான எண்ணம் உருவானால் அதிகமாக இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். மேலும் இறைவனிடம் துஆ செய்ய வேண்டும். மேலும் இந்த பாவத்திலிருந்தும் அதன் தீய விளைவிலிருந்தும் தப்பித்து விட வேண்டும்.'' பாவத்திலிருந்து தப்பிக்க வேண்டும். அந்தப் பாவத்தின் காரணமாக ஏற்படுகின்ற தீய விளைவிலிருந்தும் தப்பிக்க வேண்டும். ''அது அந்த தவறான எண்ணத்திற்குப் பின்னால் வரக்கூடியதாகும். அதை ஒரு சாதாரண விஷயமாக கருதக் கூடாது. இது மிகவும் அபாயகரமான நோயாகும். (மல்∴பூஸாத் தொகுதி 1, பக்கம் 371-372; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பிறகு இந்த வசனத்தில் அல்லாஹ் நம்மைத் தடுத்துள்ள இரண்டாவது விஷயம், பிறரது குற்றங்களைத் தேடி அலைவதாகும். அதாவது துருவித் துருவி ஒருவரது குறைகளை வெளியில் கொண்டு வருவதாகும். பிறரது குற்றங்களைத் தேடி அலைவதாகும் அல்லது ஒருவர் ஒரு விஷயத்தைப் பற்றி கூற விரும்பாமல் இருந்தால் அந்த விஷயம் எப்படியாவது தனது அறிவில் வந்து விட வேண்டும் என்பதற்காக முயற்சி செய்வதாகும். இதன் காரணமாக தீமைகள் உருவாகின்றன.

மூன்றாவது கட்டளை, புறம் பேசக் கூடாது என்பதாகும். ஒருவரைப் பற்றி புறங்கூறுவது மரணித்துப் போன தனது சகோதரனின் மாமிசத்தை உண்பது போன்றதேயாகும். இதனை நீங்கள் கடுமையாக வெறுப்பீர்கள். பெருமானார் (ஸல்) அவர்களிடம் புறங்கூறுவது தொடர்பாக கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் ஒருவரைப் பற்றிய உண்மையான விஷயத்தை அவர் அந்த இடத்தில் இல்லாமல் இருக்கும்போது, அவர் அந்த இடத்தில் இருக்கும் பட்சத்தில் அவருக்கு தீயதாகத் தோன்றும் விதத்தில் கூறுவது புறங்கூறுவதாகும் என்று கூறினார்கள். அதாவது, ஒருவருக்கு தீயதாகத் தோன்றும் விஷயமானது உண்மையாக இருந்தாலும் கூட அவர் இல்லாத சமயத்தில் பிறரிடம் அதைக் கூறுவது புறங்கூறுதலாகும். கூறப்பட்ட அந்த விஷயம் அவரிடம் இல்லாமல் இருந்தால் இது அவர் மீது சுமத்தப்படும் அவதூறாகும். (முஸ்லிம் கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா பாபு தஹ்ரீமுல் கீபத் ஹதீஸ் எண். 6593) எனவே, இத்தகைய விஷயங்களைப் பேசுவது இறையச்சமுடையவரது பணியல்ல. இதன் காரணமாக பிரச்சனைகள் உருவாகும் சமயத்தில் குழப்பம் உருவாகும். எனவே, எவரைப் பற்றியும் புறங்கூறவும் கூடாது. அவரைப் பற்றி அவதூறாகவும் எதையும் கூறக்கூடாது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எனவே, ரமலானில் அல்லாஹ்விற்கு அஞ்சுவதற்கு நாம் விரும்பும்போது, அவனது நெருக்கம் நமக்கு கிடைக்க வேண்டும் என்று நாம் விரும்பும்போது நமது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதை நாம் பார்க்க விரும்பும் போது நாம் இந்தத் தீமைகளிலிருந்து தவிர்ந்திருந்து அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப செயல்படுவதற்கு நாம் அதிகமாக முயற்சி செய்ய வேண்டும்.

அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக! நாம் அவனது அனைத்து கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டவாறு அவனது நெருக்கத்தைப் பெறக்கூடியவர்களாக ஆவோமாக! மேலும் ரமலானுக்குப் பிறகும் இந்த நன்மைகள் நம்மிடம் நிலைத்திருக்கட்டுமாக! நாம் உண்மையில் அல்லாஹ்வை வணங்கக்கூடியவர்களாக ஆவோமாக! அவனுக்கே முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பவர்களாக நாம் ஆவோமாக!

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். இது ஒரு ஷஹீதுடைய ஜனாஸாவாகும். சவுத்ரி பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான சவுத்ரி கலீக் அஹ்மது சாஹிப் அவர்களின் ஜனாஸாவாகும். இவர் கராச்சி மாவட்டத்திலுள்ள ஹல்கா குல்ஸார் ஹஜ்ரியைச் சார்ந்தவர் ஆவார். இவர்களை தமது 49 –வது வயதில் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் 20 ஜுன் 2016 –ல், இரவு ஏறக்குறைய 9.30 மணிக்கு இவரது கிளினிக்கில் நுழைந்து இவரை துப்பாக்கியால் சுட்டு ஷஹீதாக்கி விட்டனர். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

நமக்கு கிடைத்த விபரங்களின் அடிப்படையில் சவுத்ரி கலீக் அஹ்மது சாஹிப் அவர்கள் Medical Diploma படித்திருந்தார்கள். தனது வீட்டிற்கு அருகில் இவர்கள் அலோபதி மற்றும் ஹோமியோபதி கிளினிக் வைத்திருந்தார்கள். சம்பவம் நடந்த அந்த நாளில் வழக்கம்போல் நோன்பு திறந்த பிறகு குல்ஸார் ஹஜ்ரியிலுள்ள தமது கிளினிக்கிற்கு திரும்பி வந்து, அங்கு வந்திருந்த நோயாளிகளைப் பார்த்து கொண்டிருந்தார்கள். அப்போது ஹெல்மெட் அணிந்திருந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் கிளினிக்கிற்கு வந்து அவர்களை துப்பாக்கியால் சுட்டு விட்டு அந்த இடத்திலிருந்து ஓடி விட்டனர். இரண்டு குண்டுகள் அவர்களது தலையில் பட்டது. இரண்டு குண்டுகள் நெஞ்சில் பட்டது. கிளினிக்கிற்கு அருகில் இருந்த Medical Store வைத்திருந்தவர் உடனடியாக மோட்டார் சைக்கிளில் அவர்களது வீட்டிற்குச் சென்று இது பற்றி தகவல் தெரிவித்தார்கள். அவர்களது மகன் உடனடியாக காரை எடுத்து கொண்டு வந்தார். காரில் அவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். ஆனால், அவர்கள் மருத்துவமனையைச் சென்றடைவதற்கு முன்பே ஷஹாதத்தின் பானத்தை அருந்தி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

கராச்சியிலுள்ள குல்ஸார் ஹஜ்ரி ஹல்காவில் கடந்த மே மாதம் 25 ஆம் தேதி அன்று அடையாளம் தெரியாத நபர்கள் மதிப்பிற்குரிய ஹாஜி குலாம் முஹிய்யுத்தீன் சாஹிப் அவர்களின் மகன் சவுத்ரி தாவூத் அஹ்மத் சாஹிப் அவர்களையும் துப்பாக்கியால் சுட்டு ஷஹிதாக்கி விட்டனர். ஷஹீது மர்ஹூமின் குடும்பத்தில் அஹ்மதிய்யத்தின் அறிமுகம் அவர்களது தாத்தாவான அமிர்தசரஸைச் சார்ந்த மதிப்பிற்குரிய அல்லாஹ் பக்ஷ் சாஹிப் மூலமாக ஏற்பட்டது. இவர்களது குடும்பம் அமிர்தசரஸிலிருந்து இடம் பெயர்ந்து சென்றது. பிறகு அவர்கள் அங்கிருந்து சாங்கடா மாவட்டத்திற்குச் சென்று விட்டார்கள். சாங்கடாவிற்கு அருகிலுள்ள ஸெஹஸாத்பூருக்கு அருகிலுள்ள அஹ்மதுபூரில் ஷஹீது மர்ஹூம் அவர்கள் 1967 –ல் பிறந்தார்கள். F.A வரை கல்வி கற்ற பிறகு 1988 –ல் கராச்சிக்கு வந்து விட்டார்கள். பிறகு Medical Diploma படித்தார்கள். பிறகு ஒரு Private Labarotory –ல் Radiography Technecian ஆக அவர்கள் தமது பணியைத் துவக்கினார்கள். அத்துடன் மாலை நேரத்தில் தமது கிளினிக்கில் Medical Practice செய்ய ஆரம்பித்தார்கள். அதற்கு பிறகு Laborotory –ல் செய்து வந்த வேலையை விட்டு விட்டு முழுமையான Medical Clinic –ல் பணியாற்ற ஆரம்பித்தார்கள்.

ஷஹீது மர்ஹூம் அவர்கள் எண்ணற்ற சிறப்பம்சங்களைக் கொண்டவராக இருந்தார். தப்லீக் செய்வதில் இவருக்கு பேரார்வம் இருந்தது. ஜமாஅத்தைச் சாராத நபர்களுக்கு இவர்கள் தப்லீக் செய்து வந்தார்கள். மர்ஹூம் ஜமாஅத்தான தொழுகைகளை முறையாகப் பேணி வந்தார்கள். மிகவும் அனுதாப உணர்வுள்ள மனிதராக இவர்கள் இருந்தார்கள். நஃபிலான தொழுகையையும் தொழுது வந்தார்கள். உதவி செய்ய தகுதியுடையவர்களுக்கு பணம் வாங்காமல் இவர்கள் சிகிச்சையளித்து வந்தார்கள். ஜமாஅத்தைச் சாராத நோயாளிகள் அவர்களிடம் நீங்கள் காதியானியாக இருக்கின்றீர்கள். உங்களிடமிருந்து மருந்தை வாங்க உள்ளம் விரும்பவில்லை. ஆனால், என்ன செய்வது? உங்களது மருந்தின் மூலமாகத்தான் குழந்தைகள் குணமடைகின்றனர் என்று கூறி வந்தனர். அல்லாஹ்வின் அருளால் இவர்கள் வஸிய்யத் செய்தவர் ஆவார்கள். ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதில் எப்போதும் முன்னணியில் இருந்தார்கள். ஷஹீது மர்ஹூமிற்கு தமது ஹல்காவில் சந்தா வசூல் செய்பவராகவும் அன்ஸாருல்லாஹ் ஸயீமாகவும் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. கடந்த 18 வருடங்களாக தமது ஹல்காவின் வக்ஃபே நவ் செயலராக இவர்கள் தொண்டாற்றி வந்தார்கள். குழந்தைகளை மிகச் சிறு வயதிலேயே இவர்கள் தொழுகையைப் பேணக்கூடியவர்களாக ஆக்கினார்கள். இவர்களது மனைவியும் பிள்ளைகளும் இதனை எழுதியுள்ளனர். தொழுகைகளை தனித்தனியாக முறையாக அதற்குரிய நேரத்தில் இவர்கள் நிறைவேற்றி வந்தார்கள். தினந்தோறும் திருக்குர்ஆனை ஓதி அதன் மொழியாக்கத்தையும் படிப்பது இவர்களின் வழக்கமாக இருந்து வந்தது. காலத்தின் கலீஃபாவின் குத்பாவை தானும் கேட்பதுடன் எப்போதும் தனது குழந்தைகளையும் அதனை கேட்க வைத்தார்கள். காலையிலும் மாலையிலும் கண்டிப்பாக M.T.A பார்ப்பார்கள். வீடுகளில் தர்ப்பியத்திற்கு M.T.A பார்ப்பதுதான் மிகவும் சிறந்த வழியாகும். முஹல்லாவில் உள்ளவர்களுக்கு உதவி செய்பவர்களாக இருந்தார்கள்.

அவர்களது மனைவி எழுதுகின்றார்: இரண்டு மாதங்களுக்கு முன் நான் கனவில் இரண்டு டம்ளர்களில் சர்பத் நிரப்பி வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தேன். இது என்ன சர்பத் என்று நான் கேட்கின்றேன். அது ஒரு சிறந்த சர்பத் ஆக எனக்கு தோன்றியது. அப்போது கனவில் இது உலகிலுள்ள மிகச் சிறந்த பொருளின் சர்பத் ஆகும் என்று எனக்கு கூறப்பட்டது. ஷஹீது மர்ஹூமின் ஷஹாதத்திற்குப் பிறகு இந்த கனவு எனக்கு புரிய வந்தது. அதாவது இது ஷஹாதத்தின் பானமாகும். இதற்கு முன்பு ஷஹீதான தாவூத் அஹ்மது சாஹிப் அவர்களும் இவர்கள் வசித்து வந்த அதே தெருவில் சில நாட்களுக்கு முன்பு ஷஹீதானார்கள். ஆக, இரண்டு டம்ளர்கள் என்பதன் கருத்து ஒருவேளை இரண்டு ஷஹாதத்துகளாக இருக்கலாம். இவர்கள் தமக்குப் பின்னால் தமது சகோதர்கள் மற்றும் சகோதரிகளைத் தவிர தமது மனைவியான புஷ்ரா கலீக் சாஹிபா அவர்களை விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்களுக்கு இரு மகன்கள் உள்ளனர். அவர்களில் ஒருவரான அனீக் அஹ்மது ரப்வாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் படித்து வருகின்றார். இன்னொரு மகன் ரஹீக் அஹ்மது அவர்கள் BDS –ன் மூன்றாவது வருட மாணவராக இருந்து வருகின்றார். ஒரு மகனான ஷமாயீல் அஹ்மதிற்கு 16 வயது ஆகின்றது.

அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக! இவர்களது பிள்ளைகளுக்கும் இவரோடு தொடர்புடையவர்களுக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக! தந்தையின் நன்மைகள் எப்போதும் அவரது பிள்ளைகளிடம் தொடர்ந்து நீடித்து கொண்டிருக்கட்டும்!

---

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஃபத்வா (மார்க்கத்தீர்ப்பு) வழங்கினர். அந்தக் காலத்தின் முஹத்தஸ்ஸாக இருந்த இப்னே ஜோஷி என்பவன் ஒரு நூலை எழுதினான். அதற்கு தல்பீஸே இப்லீஸ் என்று பெயர் வைத்தான். அதில் அவர்களைப் பற்றி மிகவும் கசப்பான பொருத்தமற்ற தரக்குறைவான சொற்களைப் பயன்படுத்தினான். ஆனால், அவர்களது மறைவிற்குப் பிறகு இருநூறு ஆண்டுகள் கழிந்ததும் அவர்கள் எத்தகைய முழுமையான தூய உண்மையான மனிதராக ஏற்றுக் கொள்ளப் -பட்டார்கள்? மேலும் எந்த அளவு அவரை மக்கள் ஏற்றுக் கொண்டனர் என்பதை உலகம் அறிந்திருக்கின்றது. இவர்களுடன் மட்டும் அல்லாமல் அனைத்து நபிமார்களுடனும் இது போன்ற பரிமாற்றமே இருந்து வந்திருக்கின்றது.

சுருக்கமாக, இந்த நபித்துவத்தின் வழிமுறைக்கேற்ப முழு பஞ்சாப் மற்றும் இந்தியாவிலுள்ள ஆலிம்கள் காஃபிர், தஜ்ஜால், குழப்பவாதி, தீயவன் போன்ற பட்டங்களை எனக்கு தந்துள்ளனர். மேலும், நான் நபிமார்களை ஏசுகின்றேன் (நஊதுபில்லாஹ்) என்றும் அவர்கள் கூறுகின்றனர். ஆனால், நான் அந்த எல்லா நபிமார்களையும் மதிக்கின்றேன். அவர்களது மகத்துவத்தையும் உண்மையையும் வெளிப்படுத்துவதற்காகவே நான் வந்துள்ளேன்.

உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்! நான் இறைவன் புறமிருந்து வரவில்லையென்றால், மேலும் நான்தான் பொய்யன் என்றால் பிறகு அனைத்து நபிமார்களில் எந்த ஒருவரது நபித்துவத்தையும் எவரும் நிரூபித்துக்காட்ட முடியாது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணம் அடைந்து விட்டார்கள் என்று கூறுவது அவரை ஏசுவதாக இருந்தால் பிறகு அனைவரையும் விட முதலாவதாக அவரை ஏசுபவன் அந்த இறைவனே ஆவான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் 573-574
2003 ஆம் ஆண்டு பதிப்பு - ரப்வாவில் அச்சிடப்பட்டது)

# ஜுமுஆ பேருரை

அருளுக்குரிய ரமலான் மாதத்தின் இறுதி ஜுமுஆ தொடர்பாக அஹ்மதி அல்லாத முஸ்லிம்களிடம் வழக்ககத்தில் இருந்து வருகின்ற சில தவறான எண்ணங்கள் மற்றும் மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்படும் விஷயங்களைப் பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறியவாறு அவற்றை மறுக்கின்ற கருத்துக்களையும் விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

நம்மீது அல்லாஹ்வின் மாபெரும் கருணை உள்ளது. இக்காலத்தில் அனுப்பிய தனது தூதரையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரையும் ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியத்தை நமக்கு அல்லாஹ் நல்கியுள்ளான். அன்னார் இந்த தவறான சிந்தனைகள் மற்றும் எண்ணங்களிலிருந்து நம்மை தூய்மைப்படுத்தி சரியான வழியை காட்டித் தந்துள்ளார்கள். மேலும் அன்னார் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை நமக்கு தெரிவித்துள்ளார்கள். மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதற்குரிய வழிகளையும் அவர்கள் நமக்கு காட்டித் தந்தார்கள்.

நம்மிடத்தில் ஒரு வகையில் ஜுமுஅத்துல் விதாவைப் பற்றிய சிந்தனை இருக்கின்றது என்று வைத்துக் கொண்டாலும் அது முற்றிலும் இதிலிருந்து மாற்றமானதாகும். ஓர் உண்மையான அஹ்மதியிடம் அப்படிப்பட்ட சிந்தனைதான் இருக்கவும் வேண்டும். அது என்னவென்றால், நாங்கள் மிகக் கடினமான இதயத்துடன் இந்த ஜுமுஆவை வழியனுப்புகின்றோம். மேலும் உண்மையில் ஜுமுஆவை வழியனுப்பவில்லை. மாறாக, இந்த மாதத்தை வழியனுப்புகின்றோம். இந்த எண்ணத்துடன் வழியனுப்புகின்றோம். ஜுமுஆ நமக்கு ஒரு பெரிய எண்ணிக்கையில் ஒன்று கூடுவதற்கான ஒரு வழிமுறையாக உள்ளது. மேலும் இது இந்த ரமலானுடைய கடைசி ஜுமுஆவும் ஆகும். எனவே நாம் அனைவரும் ஒன்று கூடி அல்லாஹ்விடத்தில் இவ்வாறு துஆ செய்கின்றோம்.அல்லாஹ்வே! எங்களுக்கு நீ மீண்டும் பாக்கியம் வழங்குவாயாக! ரமலானில் எந்த நாட்களையும் ஜுமுஆவையும் கழித்திருக்கின்றோமோ அதனை மீண்டும் அடையும் பாக்கியம் வழங்குவாயாக! ரமலானில் நாங்கள் பெற்ற பரக்கத்துகளில் நிலைநின்றவாறு எங்களுடைய முழுமையான ஆற்றல்களுடன் அடுத்த ரமலானை வரவேற்றக்கக் கூடியவர்களாக நாங்கள் இருக்க வேண்டும். அதற்கு வாய்ப்பளிப்பாயாக! என்று நாம் துஆ செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட நமக்கு ஜுமுஆ தொழுகைகளை நிறைவேற்றுவதை ரமலானோடும் அல்லது ஜுமுஅத்துல் விதாவோடு மட்டும் தொடர்புடையதாகவும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதாகவும் ஆக்குவது நமக்கு எந்த வகையிலும் ஆகுமானதல்ல.

திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளின் மேற்கோள்களிலிருந்து அருளுக்குரிய ஜுமுஆவின் முக்கியத்துவம் மற்றும் அதன் சிறப்புகள் பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மேலும், ஜுமுஆ பேருரையை நேரடியாகக் கேட்பது மற்றும் அதிலிருந்து பயனடைவது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் மிகவும் வலியுறுத்திக் கூறியவாறு ஜமாஅத்திற்கு வழங்கியுள்ள வழிகாட்டல்கள்.

ஜுமுஆ நாளன்று அரசு விடுமுறையைப் பெறுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளைப் பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்**
**1 ஜுலை 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **1 வஃபா** மாதம் ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

يٰٓأَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا إِذَا نُوْدِيَ لِلصَّلٰوةِ مِنْ يَّوْمِ الْجُمُعَةِ فَاسْعَوْا إِلٰى ذِكْرِ اللّٰهِ وَذَرُوا الْبَيْعَ۔ ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ إِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ۔ فَإِذَا قُضِيَتِ الصَّلٰوةُ فَانْتَشِرُوْا فِي الْأَرْضِ وَابْتَغُوْا مِنْ فَضْلِ اللّٰهِ وَاذْكُرُوا اللّٰهَ كَثِيْرًا لَّعَلَّكُمْ تُفْلِحُوْنَ۔ وَإِذَا رَأَوْا تِجَارَةً أَوْ لَهْوًا انْفَضُّوْٓا إِلَيْهَا وَتَرَكُوْكَ قَآئِمًا۔ قُلْ مَا عِنْدَ اللّٰهِ خَيْرٌ مِّنَ اللَّهْوِ وَمِنَ التِّجَارَةِ۔ وَاللّٰهُ خَيْرُ الرّٰزِقِيْنَ

அல்லாஹ் ரமலானுடைய நோன்புகள் கடமையாக்கப்பட்டதற்கான கட்டளையை வழங்கியபோது அத்துடன் أَيَّامًا مَّعْدُوْدَاتٍ என்றும் கூறுகின்றான். அதாவது, எண்ணி சில நாட்களே என்று கூறுகிறான். ரமலான் தொடங்கியபோது வெப்ப காலமாக இருக்கின்றது. இந்த 30 நாட்கள் எப்படி கழியப் போகின்றது? என்று நம்மில் பலர் எண்ணியிருப்பார்கள். ஆனால், அல்லாஹ் கூறியதுபோன்று எண்ணி சில நாட்களாகவே இருந்தன. அவை கழிந்தும் விட்டன. இன்று 25 – ஆவது நோன்பாகும். இந்த நாட்கள் கடந்ததே எங்களுக்கு தெரியவில்லை என்று எனக்கு பலரும் எழுதுகின்றார்கள். உண்மையில் இந்த விஷயம் சரியாகும். ரமலான் வரும்போது தொடக்கத்தில் பகல் பெரியதாக இருப்பதாக தோன்றும். ஆனால், நாட்கள் செல்லச் செல்ல அந்த எண்ணமே இல்லாமல் போய் விடும். இன்று ரமலானுடைய கடைசி ஜுமுஆவாகும். இன்னும் ஐந்து நோன்புகள் உள்ளன. மற்ற இடங்களில் நான்கு நோன்புகள் எஞ்சியிருக்கலாம். இந்த நான்கு, ஐந்து நாட்களில் ரமலானிலிருந்து முழுமையாகப் பயன்பெற முயற்சி செய்ய வேண்டும். ரமலானிலிருந்து முழுமையாகப் பயன் பெறுவதில் என்ன குறைகள் இருந்தனவோ? அதனை அகற்ற இந்த எஞ்சிய நாட்களில் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வே! எங்களது குறைகளை திரையிடுவாயாக! என்று நாம் அவனிடத்தில் துஆ செய்ய வேண்டும். ரமலானின் பரக்கத்துகளிலிருந்து இழப்பிற்குரியவர்களாக நம்மை அல்லாஹ் ஆக்கி விடாமல் இருப்பதற்காவும் துஆ செய்ய வேண்டும்.

இன்று நான் கூறியது போன்று ரமலானின் கடைசி ஜுமுஆவாகும். இதனை பொதுவான சொல் வழக்கில் ஜுமுஅத்துல் விதா என்று கூறுவார்கள். பாமர முஸ்லிம்கள் இந்த ஜுமுஆவை ரமலானின் கடைசி ஜுமுஆவாக கருதியவாறும், இந்த ஜுமுஆவில் செய்யப்படக்கூடிய அனைத்து துஆக்களும் ஒப்புக்கொள்ளப்படும் என்ற எண்ணத்திலும் தொழுகின்றார்கள். மேலும் இந்த ஜுமுஆவை தொழுது விடுவதனால் ஆண்டு முழுவதும் விடுபட்டுப் போன தொழுகைகள், ஜுமுஆக்கள் மற்றும் ஏனைய வணக்கங்களுக்குப் பரிகாரமாக அது அமைந்து விடுகின்றது என்றும் எண்ணம் கொண்டுள்ளனர். ஆனால், ஓர் உண்மையான நம்பிக்கையாளருக்கு இந்த எண்ணம் இருக்காது. இது முற்றிலும் தவறான எண்ணமாகும். ஓர் உண்மையான நம்பிக்கையாளரைப் பொருத்தவரை இதுபோன்ற விஷயங்கள் மற்றும் எண்ணங்கள் மார்க்கத்தை எள்ளி நகையாடுகின்ற காரியமாகும். நம்மீது அல்லாஹ்வின் மாபெரும் கருணை உள்ளது. இக்காலத்தில் அனுப்பிய தனது தூதரையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரையும் ஏற்றுக் கொள்ளும் நற்பாக்கியத்தை நமக்கு அல்லாஹ் நல்கியுள்ளான். அன்னார் நமக்கு இந்த தவறான சிந்தனைகள் மற்றும் எண்ணங்களிலிருந்து நம்மை தூய்மைப்படுத்தி சரியான வழியை காட்டித் தந்துள்ளார்கள். மேலும் அன்னார் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை நமக்கு தெரிவித்துள்ளார்கள். மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுவதற்குரிய வழிகளையும் அவர்கள் நமக்கு காட்டித் தந்தார்கள்.

முஸ்லிம்களிடம் இந்த நடைமுறை இருந்து வருகிறது. அவர்கள் ஜுமுஅத்துல் விதா நாளன்று நான்கு ரக்அத்துகள் தொழுகின்றார்கள். அதற்கு அவர்கள் கஸாயே உமரி – வாழ்நாள் பரிகாரம் என்று பெயர் வைக்கின்றார்கள். கடந்த காலங்களில் அவர்கள் விட்டு விட்ட தொழுகைகளுக்குப் பரிகாரமாக இந்த தொழுகை அமைவதாக அவர்கள் கருதுகின்றனர். இதற்கு ஏதும் ஆதாரம் உள்ளதா? இதன் உண்மை நிலை என்ன? இது ஆகுமானதா? என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஒருமுறை ஒரு சபையில் கேட்கப்பட்டது.

அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். ''இது வீணான காரியமாகும். எந்த நபர் ஆண்டு முழுவதும் வேண்டுமென்றே தொழாமல் இருந்து விடுகின்றாரோ மேலும் அவர் கஸாயே உமரி அதாவது, வாழ்நாள் பரிகாரத் தொழுகையை தொழுவதனால் அது அந்த தொழுகைகளுக்குப் பரிகாரமாக அமைந்து விடும் என்று கருதி அவற்றை தொழாமல் இருக்கின்றாரோ அவர் பாவம் செய்தவராவார். எவர் வெட்கப்பட்டு தவ்பா செய்கின்றாரோ மேலும் எதிர்காலத்தில், நான் எந்தத் தொழுகையையும் விட்டு விட மாட்டேன் என்ற உறுதி கொண்டவாறு தொழுகின்றாரோ அவருக்கு அது தடையில்லை.''

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: ''இவ்விஷயத்தில் நாம் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடைய கூற்றையே பதிலாக கூறுவோம். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடைய சம்பவம் இதுவாகும். ஒருமுறை ஒரு நபர் தொழக்கூடாத நேரத்தில் தொழுது கொண்டிருந்தார். அது தொழுகைக்குரிய நேரமாக இருக்கவில்லை. ஆனால் அவரோ தொழுது கொண்டிருந்தார். அப்போது ஒருவர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடத்தில் கூறினார். நீங்கள் காலத்தின் கலீஃபா ஆவீர்கள். நீங்கள் ஏன் இவரை தடுப்பதில்லை? எனக்

கேட்டார். அதற்கு அன்னார், நான் இந்த வசனத்தின் கீழ் வந்து விடுவேனோ என அஞ்சுகின்றேன் என்று கூறினார்கள். اَرَءَيْتَ الَّذِيْ يَنْهٰى۔ عَبْدًا اِذَا صَلّٰى அதாவது தொழுகின்ற நபரை தடுக்கின்றவரை நீர் காணவில்லையா? என்பது அந்த வசனமாகும்.'' (96:10–11)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த சம்பவத்தை சுட்டிக் காட்டிக் கூறுகின்றார்கள்: ஒருவர் வெட்க உணர்வுடன் தனது தவறை உணர்ந்து தொழுகின்றார் என்றால் அவரை ஏன் தடுக்க வேண்டும்? அவ்வாறு நான்கு ரக்அத்துகள் தொழக்கூடியவர் வேறு என்ன செய்கின்றார்? துஆ தானே செய்கின்றார். அது அவரது தைரியமின்மை ஆகும். ஆனால் எண்ணங்களின் நிலைகளை அல்லாஹ்வே நன்கு அறிகின்றான். அதன் காரணமாகவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூட எச்சரிக்கையாக இருந்து வந்தார்கள். اَرَءَيْتَ الَّذِيْ يَنْهٰى۔ عَبْدًا اِذَا صَلّٰى என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறிய இந்த வசனத்தைக் கருத்தில் கொண்டவாறு அந்த தொழுகையாளியைத் தடுக்கவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இதே விஷயத்தை கருத்தில் கொண்டவாறே இவ்விஷயத்தில் இந்த மார்க்கத் தீர்ப்பை வழங்கியுள்ளார்கள். ஆனால் அச்செயலை சோம்பேறித்தனம் என்றும், முயலாமை என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். கஸாயே உமரி அதாவது, வாழ்நாள் முழுவதற்குமான பரிகாரத் தொழுகை என்ற எண்ணத்திலும், சீர்திருத்தத்தைக் கருத்தில் கொள்ளாமலும் தொழுதால் அது தவறாகும். ஆனால், இன்றைய நாளுக்குப் பிறகு நான் தொடர்ந்து தொழுவேன். தொழுகையை விட்டு விட மாட்டேன் என்ற எண்ணத்தில் ஒருவர் நான்கு ரக்அத்துகள் தொழுவார் என்றால் அது ஆகுமானதாகும். இல்லையென்றால், மற்ற நிலையில் அந்த நபர் பாவம் செய்தவராவார். (மல்.'.பூ.'.ஸாத் தொகுதி 5, பக்கம் 366) எனவே, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் வாழ்நாள் பரிகாரத் தொழுகை (கஸாயே உமரி) என்ற சிந்தனை கிடையாது. நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் சடங்கு சம்பிரதாயங்களிலிருந்து விலகி இருப்போம் என்றும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என்றும் காலத்தின் இமாமிடம் பைஅத் செய்திருக்கின்றோம். மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என்று உடன்படிக்கை செய்திருக்கும் போது தொழுகையை விட்டு விடுவது என்பதும் ஜுமுஆவை விட்டு விடுவதும் எப்படி சாத்தியமாகும்? நம்மிடத்தில் ஒரு வகையில் ஜுமுஅத்துல் விதாவைப் பற்றிய சிந்தனை இருக்கின்றது என்று வைத்துக் கொண்டாலும் அது முற்றிலும் இதிலிருந்து மாற்றமானதாகும். ஓர் உண்மையான அஹ்மதியிடம் அப்படிப்பட்ட சிந்தனைதான் இருக்கவும் வேண்டும். அது என்னவென்றால், நாங்கள் மிகக் கடினமான இதயத்துடன் இந்த ஜுமுஆவை வழியனுப்புகின்றோம். மேலும் உண்மையில் ஜுமுஆவை வழியனுப்பவில்லை. மாறாக, இந்த மாதத்தை வழியனுப்புகின்றோம். இந்த எண்ணத்துடன் வழியனுப்புகின்றோம். ஜுமுஆ ஒரு பெரிய எண்ணிக்கையில் நாம் ஒன்று கூடுவதற்கான ஒரு வழிமுறையாக உள்ளது. மேலும் இது இந்த ரமலானுடைய கடைசி ஜுமுஆவும் ஆகும். எனவே நாம் அனைவரும் ஒன்று கூடி அல்லாஹ்விடத்தில் இவ்வாறு துஆ செய்கின்றோம்.

அல்லாஹ்வே! எங்களுக்கு நீ மீண்டும் பாக்கியம் வழங்குவாயாக! ரமலானில் எந்த நாட்களையும் ஜுமுஆவையும் கழித்திருக்கின்றோமோ அதனை மீண்டும் அடையும் பாக்கியம் வழங்குவாயாக! ரமலானில் நாங்கள் பெற்ற பரக்கத்துகளில் நிலைநின்றவாறு எங்களுடைய முழுமையான ஆற்றல்களுடன் அடுத்த ரமலானை வரவேற்கக் கூடியவர்களாக நாங்கள் இருக்க வேண்டும். அதற்கு வாய்ப்பளிப்பாயாக! என்று நாம் துஆ செய்ய வேண்டும்.

இந்த சிந்தனை தான் நமது சிந்தனையாக இருக்க வேண்டும். ஓர் அன்பிற்குரியவர் நம்மிடமிருந்து விடை பெறும் போது நீங்கள் செல்லுங்கள். எங்களை விட்டுப் பிரிகின்றீர்கள். எனவே நாங்கள் உம்மை மறந்து விடுவோம் என்ற எண்ணத்தோடு நாம் அவரை வழியனுப்புவதில்லை. தனது நேசத்திற்குரிய ஒருவர் தன்னை விட்டு நிரந்தரமாக பிரியும்போது மனிதன் அவரது நினைவுகளைக் கூட மறப்பதில்லை. அவரது நினைவுகளைச் சுமந்தவாறு அவரது நன்மைகளைச் செய்யக்கூடியவனாக மனிதன் இருக்கின்றான் அல்லது தனது அந்த அன்பிற்குரியவரின் பெயரால் சில நன்மைகளை செய்வான். அவர் நம்பிக்கையாளர் என்றால் அவருக்காக மனிதன் துஆவும் செய்வான். தற்காலிகமாக பிரியக் கூடியவரையும் மனிதன் மறப்பதில்லை. தனது பணிகள் காரணமாக ஒரு நகரத்தை விட்டு இன்னொரு நகரத்திற்கோ அல்லது ஒரு நாட்டை விட்டு இன்னொரு நாட்டிற்கோ சென்று விட்டாலும் கூட மனிதன் தனது அன்பிற்குரியவரை முற்றிலும் மறப்பதில்லை. இன்றைய காலத்தின் வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்தியவாறு உதாரணமாக ஃபோன், டெக்ஸ்ட் மெஸேஜ் அனுப்புவது அல்லது இது போன்ற ஏனைய பல காரணிகள் உள்ளன. அதனை பயன்படுத்தி மனிதன் அவரை தொடர்பு கொள்கின்றான். *Skype* என்ற ஒரு வழிமுறை இருக்கின்றது. அதன் மூலமாகவும் மனிதன் தன் அன்பிற்குரியவர்களிடம் தொடர்பு கொள்கின்றான். அதன் மூலமாக தன் அன்பிற்குரியவரின் குரலைக் கேட்கின்றான். அவரது அசைவுகளைப் பார்க்கின்றான்.

எனவே, நமது அன்பிற்குரியவரின் நினைவுகள் நமது உள்ளத்திலிருந்து இரண்டு, மூன்று ஆண்டுகள் அகன்று விட வேண்டும் என்று எண்ணி நாம் அவரை வழியனுப்பி வைப்பதில்லை. நீங்கள் யார்? நீங்கள் யாராக இருந்தீர்கள்? என்பதெல்லாம் எங்களுக்கு தெரியாது. நீங்கள் மீண்டும் சந்திக்கும்போது உங்களுடைய உரிமையைச் செலுத்த வேண்டுமா? வேண்டாமா? உங்களிடம் அன்புடன் நடந்து கொள்ள வேண்டுமா? வேண்டாமா? என்று அப்போது நாங்கள் பார்த்துக் கொள்வோம் என்று மனிதன் நினைப்பதில்லை. நீங்கள் உலகியல் நடைமுறைகளில் இப்படிப்பட்ட மனிதர்களை நீங்கள் பார்த்திருந்தால் எவர் அவ்வாறு செய்வாரோ அவரை மற்ற மக்கள் அனைவரும் பைத்தியக்காரன் என்றே கூறுவார்கள்.

ஆனால், எல்லாரையும் விட மிக அன்பிற்குரிய இறைவனைப் பற்றிய கேள்வி வருகின்றது. அந்த இறைவனோ நம்மை பராமரிக்கின்றான். அவன் அகில உலகங்களுக்கும் இறைவன் ஆவான். அவன் நமக்கு எல்லாவற்றையும் தரக்கூடியவன் ஆவான். அவன் அளவற்ற அருளாளன் ஆவான். மேன்மேலும் கருணை காட்டுபவனும் ஆவான். அவன் கூறுகின்றான். என் மீதான நம்பிக்கையை நீங்கள் முழுமை செய்யுங்கள். என்னுடனான அன்பிற்குரிய தொடர்புகளையும் எனது நெருக்கத்தையும் முறித்துக் கொள்ளாதீர்கள் என்று அவன் கூறுகின்றான். அவன் கூறுகின்றான். நீங்கள் என்னுடைய கூற்றிற்கு செவிமடுங்கள். அவ்வாறு செய்தால் அன்பு கொள்ளக்கூடிய அனைவரையும் விட நான் உங்கள் மீது அதிகமாக அன்பு கொள்வேன். மேலும் நீங்கள் என்னை நேசிப்பதற்கும் நான் உரிமை படைத்திருக்கின்றேன். அந்த இறைவன் மேலும் கூறுகின்றான். எனது நினைவுகளை நீங்கள் பசுமையாக வைத்திருங்கள் என்று கூறக்கூடிய இறைவனிடம் நாம் இவ்வாறு கூறுவோமா? இறைவா! குறுகிய இந்த நாட்களில் நாங்கள் உன்னை நினைவு கூர்ந்து விட்டோம். நீ கடமையாக்கிய நோன்பை நாங்கள் நோற்று விட்டோம். உன்னை தொழுதோம். உன்னை வணங்கினோம். இப்போது அந்த விஷயம் முடிந்து விட்டது. இனி எங்களுக்கு விடுமுறைதான். இனி யார் அல்லாஹ்? யார் இறைவன்? என்று எங்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறியவாறு நாங்கள் உன்னை இந்த ஜுமுஆவோடு வழியனுப்பி வைக்கின்றோம். இந்த வழியனுப்புதலோடு ஓராண்டு முழுவதும் முழுமையாக உன்னை நாங்கள் மறந்து விடுவோம். ஒரு வருடம் கழிந்து இனி அடுத்த ரமலான் வரும்போது இறை வணக்கங்கள் மற்றும் நன்மைகள் மூலமாக உன்னை நினைவு கூற முயற்சி செய்வோம். உடல் நலமும், ஆயுளும் கிடைத்தால் ஏதோ எங்களால் முடிந்தவரை சிறிதளவு உன்னை வணங்குவோம். முழு ரமலானிலும் எந்தவொரு இறை வணக்கத்தையும் நன்மையையும் செய்ய முடியாமல் போனால் எப்படியும் ரமலானின் கடைசியில் ஜுமுஅத்துல் விதா வந்தே தீரும். அதில் ஒன்று கூடி உனக்குரிய உரிமையைச் செலுத்தி விடுவோம். அவ்வளவு தான். உன்னுடைய இறைத் தன்மையையும் உன்னுடைய கருணைகளுக்கும் உரிய கடனை அன்று ஒரு நாளில் நாங்கள் அடைத்து விடுவோம்.

இப்படி எவர் சிந்தனை செய்து கொண்டிருப்பாரோ அவரையும் மக்கள் பைத்தியம் என்றே கூறுவர். உண்மையில் இது போன்ற சிந்தனைகளை மக்கள் உள்ளத்தில் வைத்திருக்கின்றனர். ஆனால் நாவால் வெளிப்படுத்துவதில்லை. அவ்வாறிருப்பினும் அவர்களது செயல்கள் அதனை வெளிப்படுத்தி விடுகின்றன. இந்த ஜுமுஆவினுடைய வருகையையும் அடுத்து வருகின்ற ஜுமுஆவின் வருகையையும் வைத்தே அதை நம்மால் கணக்கிட முடியும். இந்த எண்ணம் எவரிடத்தில் இருக்குமோ அது அவரது அறிவீனம் என்றும் அவருக்கு மார்க்கத்தைப் பற்றி சரியான புரிதல் இல்லை என்றும் கூறுவோம். மேலும் அத்தகைய நபருக்கு இறைவன் மீது குறைவான ஈமான் கூட இல்லை என்றே கூறுவோம். எனவே, ஒரு நம்பிக்கையாளருக்கு அப்படிப்பட்ட சிந்தனை இருக்க முடியாது. நம்பிக்கையாளர் என்பவர் இதுபோன்ற விஷயங்களிலிருந்து மிகவும் உயர்ந்தவர். நம்பிக்கையாளர் அல்லாஹ்வால் கூறப்பட்ட நன்மைகளை எப்போதும் தொடர்ந்து செய்து கொண்டிருப்பார். அவர் அல்லாஹ்விற்குரிய நன்றி உணர்வால் நிறைந்திருப்பார். அவர் ரமலானைக் கடப்பது அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவே இருக்கும். அவர் அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்பட்டவாறு ரமலானைக் கடந்து அதை வழியனுப்பும்போது நாம் ரமலானை விட்டுப் பிரிகின்றோமே என்ற மிக கனத்த இதயத்துடன்தான் ரமலானை வழியனுப்பி வைப்பார். ஆனால், இந்த நாட்களின் நினைவை அவர் எப்போதும் தனது உள்ளத்தில் பசுமையாக வைத்திருப்பார். அவர் ரமலானில் என்னென்ன அன்பான மற்றும் நல்ல விஷயங்களைக் கற்றுக் கொண்டாரோ அதனை அவர் எப்போதும் அசை போட்டுக் கொண்டே இருப்பார். ரமலானில் இறை வணக்கத்தின் பக்கம் அவருக்கு ஏற்பட்ட கவனத்தை எப்போதும் அவர் உயிருடன் வைத்திருப்பார். ஒருபோதும் இறை நெருக்கத்தைப் பெறுவதிலிருந்து எமது பாதங்கள் நின்று விடாது என்றே அவர் கூறுவார். இறைவா! உனது அன்பின் வினோதக் காட்சிகளை நாங்கள் கண்டோம். நாங்கள் நடந்து உன்னை அடைய முயற்சி செய்கின்றபோது நீ உனது வாக்குறுதிக்கேற்ப எங்களை நோக்கி ஓடோடி வந்து விடுகின்றாய் என்றே அவர் கூறுவார்.

எனவே, நம்மால் உலகியல் தொடர்புகளின் நினைவுகளைப் பசுமையாக வைத்துக் கொள்ள முடியும்போது மிகவும் அன்பிற்குரிய இறைவனின் நினைவை மறந்து விடுவதும், அவனது கருணைகளை மறந்து விடுவதும் எவ்வாறு சாத்தியமாகும்? கருணை காட்டுகின்ற அல்லாஹ்வின் வழிமுறைகள் முற்றிலும் வினோதமானதாகும். இது அல்லாஹ்வின் எவ்வளவு பெரிய கருணையாகும். அவன் இந்தப் பிரிவிற்கு பிறகு அவனது நினைவுகளைப் பசுமையாக வைத்திருக்க அவனது நினைவுகளை மறப்பதிலிருந்து நம்மை காப்பாற்றவும் அவனது நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருக்கவும் ஏழு நாட்களுக்குப் பிறகு மீண்டும் இதே போன்று ஒரு நிகழ்ச்சியை நடத்துவதற்கான ஏற்பாட்டை அவன் செய்திருக்கின்றான். ரமலானுக்கு ஓராண்டு காலம் காத்திருக்க வேண்டியது இருக்கின்றது. ஆனால் தனது அன்பினை வெளிப்படுத்துவதிலிருந்தும் மற்றும் தனது அருட்கொடைகளை வழங்குவதிலிருந்தும் அவன் விலகியிருக்கவில்லை. ஒவ்வோர் ஏழாவது நாளிலும் ஒரு ஜுமுஆவை வைத்து அந்த பரக்கத்துகளைப் பெறக் கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்கியுள்ளான். எந்த நன்மைகள் ஜுமுஅத்துல் விதா நாளன்று கிடைக்கக் கூடியதாக உள்ளதோ அதே நன்மைகள் அந்த நாளிலும் கிடைத்து விடக் கூடும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''ஜுமுஆ நாளன்று ஒரு நேரம் வருகின்றது. ஒரு முஸ்லிம் அதில் தொழுதவாறு எந்த துஆ செய்தாலும்

இறைவன் அதனை ஒப்புக் கொண்டு விடுகின்றான். ஆனால் அந்த நேரம் மிக குறுகிய நேரமாகும்.'' (சஹீஹ் புகாரி கிதாபுல் ஜும்அதி பாபு சாஅத்துல்லதீ ஃபீ ஃபஸ்லில் யவ்மில் ஜும்அதி ஹதீஸ் எண். 935) அந்த நேரம், அந்த தருணம் ரமலானின் கடைசி ஜுமுஆவில் எந்த அளவிற்கு இருந்ததோ அதே அளவிற்கு தான் மற்ற ஜுமுஆக்களிலும் இருக்கின்றது. எனவே இன்றைக்குப் பிறகு அல்லாஹ் உடைய இந்த நெருக்கத்திற்குரிய தருணத்திலிருந்து நாம் பிரிந்து விடப் போவதில்லை. மாறாக, இந்த தருணம் ஏழு நாட்களுக்குப் பிறகு நமக்கு மீண்டும் கிடைக்க இருக்கின்றது. ஒருவர் இந்த நன்மைகளுக்கும் இந்த தருணங்களுக்கும் விடை கொடுத்து விடுகின்றார் என்றால் அவர் நம்பிக்கையாளர் அல்ல. ஒரு நம்பிக்கையாளர் ஒருபோதும் நன்மைகளை வழியனுப்பி வைக்க மாட்டார். ஒரு நம்பிக்கையாளர் ஒருபோதும் அல்லாஹ்வை விட்டு விலகிச் செல்ல மாட்டார். மாறாக, நான் எவ்வாறு நன்மைகளை பசுமையாக வைத்திருக்க முயற்சி செய்வேன் என்ற எண்ணத்திலேயே இருப்பார். நான் எவ்வாறு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறக்கூடிய வழிகளைத் தேடுவேன் என்ற எண்ணத்தில் இருப்பார். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்குரிய வழிகள் எல்லைக்குட்டட்டதாக இல்லை. ஒவ்வொரு நன்மையும் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தருகின்றது. எனவே, அவர் வெறும் ஜுமுஆவை மட்டும் சார்ந்திருக்காமல் நன்மைக்குரிய எல்லா வழிகளையும் அவர் தேடிக் கொண்டிருப்பார். ஜுமுஆ நாள் வரும்போது மட்டுமே அல்லாஹ்வை சந்திப்பதற்குரிய ஏற்பாடு கிடைக்கும் என்று அவர் அமர்ந்திருக்க மாட்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை விரைவாக சந்திப்பதற்கும் அவனது நெருக்கத்தை பெறுவதற்குமுரிய வழிமுறைகளை நமக்கு கற்றுக் கொடுத்தவாறு இவ்வாறு கூறினார்கள். ''ஐந்து நேரத் தொழுகைகள் இருக்கின்றன. அடுத்து ஒரு ஜுமுஆவிற்குப் பிறகு அடுத்த ஜுமுஆ இருக்கின்றது. ஒரு ரமலானிற்குப் பிறகு அடுத்த ரமலான் வருகின்றது. இதை அனைத்தும் தமக்கிடையில் ஏற்படக்கூடிய பாவங்களுக்கு அவை பரிகாரமாக அமைந்து விடுகின்றன. ஆனால் நிபந்தனை என்னவென்றால், மனிதன் பெரிய பெரிய பாவங்கள் செய்வதிலிருந்தும் விலகி இருக்க வேண்டும்.'' (சஹீஹ் முஸ்லிம் கிதாபுத் தஹாரத் பாபுஸ் ஸலவாத்தில் கம்ஸி வல் ஜும்அதி இலல் ஜும்அதி ஹதீஸ் எண். 440) எனவே, அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு அல்லாஹ் ஐந்து வேளை தொழுகைகளுக்கான ஏற்பாட்டை செய்திருக்கின்றான். இந்த தொழுகைகளின் மூலமாக அல்லாஹ்வுடன் தொடர்பு கொண்டு பாவமன்னிப்பிலிருந்து பங்கு பெற்றுக் கொள்ளலாம். அவனது கருணையைப் பெற்றுக் கொண்டே இருக்கலாம். ஆனால் இங்கும் நிபந்தனை என்னவென்றால், வேண்டுமென்றும் பிடிவாதம் கொண்டவாறும் பெரிய பாவங்களில் ஈடுபடக் கூடாது. ஒவ்வொரு ஜுமுஆவிலும் கலந்து கொண்டு துஆ ஒப்புக் கொள்ளப்படக்கூடிய அந்த நேரத்திலிருந்து பயனடைய வேண்டும். அவ்வாறு நீங்கள் செய்தால் நீங்கள் தீமைகளிலிருந்து தப்பிக்கக் கூடியவர்களாகவும் நன்மைகள் செய்யக் கூடியவர்களாகவும் ஆகி விடுவீர்கள். ரமலானின் ஏற்படுத்திக் கொண்ட மாற்றங்களை ஆண்டு முழுவதும் தொடர வேண்டும். இவ்வாறு செய்தவாறு பெரிய பெரிய பாவங்களிலிருந்து விலகி இருந்தால் பின்னர் நீங்கள் ரமலானில் மட்டுமல்ல; ஆண்டு முழுவதும் அல்லாஹ்வின் கருணை மற்றும் பாவமன்னிப்பைப் பெறுவதற்கான உரிமை படைத்தவர்களாக ஆகி விடுவீர்கள். மேலும் நெருப்பிலிருந்தும் இரட்சிப்பைப் பெறுவீர்கள்.

எனவே, இந்த ஜுமுஆ (ஜுமுஅத்துல் விதா) மற்றும் இந்த ரமலான் எங்களது தொழுகையின் பக்கமும் மற்ற ஜுமுஆ தொழுகையினை நிறைவேற்றுவதன் பக்கமும் எங்களுக்கு கவனமூட்டக்கூடியதாக இருக்கும் என்றும் ரமலானில் நாங்கள் செய்த நன்மைகளையும், கற்றுக் கொண்ட நன்மைகளையும் அடுத்த ரமலான் வரை முன்னெடுத்துச் செல்வதற்கு முழுமையாக முயற்சி செய்வோம் என்றும் இன்று ஒவ்வொருவரும் உறுதிமொழி எடுக்க வேண்டும்.

ஆகவே, இறை வணக்கங்கள் மற்றும் நன்மைகளின் பக்கம் நமக்கு ஏற்பட்ட கவனத்தில் நாம் நிலை நிற்பதற்கு இந்த உறுதிமொழிகளை நாம் எடுக்க வேண்டும். அப்போதுதான் அடுத்த ரமலானுக்கு நாம் ஆயத்தமாக முடியும். மேலும், அந்த ரமலானை நாம் வரவேற்பதற்கு நாம் தொடர்ந்து முயற்சி செய்யக் கூடியவர்களாக இருப்போம். அவ்வாறு செய்தால் அடுத்த ரமலானை நாம் அடையும்போது நாம் குறிப்பிட்ட ஒரு இலக்கை அடைந்திருப்போம். அடுத்து அந்த ரமலானிலிருந்து வெற்றிகரமாக வெளியேறுவதற்கு புதிய இலக்கை நம்மால் நிர்ணயித்துக் கொள்ள முடியும். மேலும், இதன் மூலம் நாம் நன்மைகளில் முன்னேறிக் கொண்டு செல்பவர்களாக இருப்போம். மேலும், இறைவனை மேலும் நெருங்கிக் கொண்டே செல்வோம். அவனது இருப்பைப் பற்றி மேலும் அதிகமான ஞானங்களைப் பெறக் கூடியவர்களாகத் திகழ்வோம். நம்மில் இன்னும் ஏராளமான நபர்கள் உள்ளனர். அவர்கள் அல்லாஹ்வை அடைவதற்குரிய ஏராளமான படித்தரங்களைக் கடக்க வேண்டியதுள்ளது. நாம் அல்லாஹ்வை அடைவதற்குரிய அனைத்து படித்தரங்களையும் கடந்து விட்டோம் என்று நம்மால் கூற முடியாது. இந்தப் படித்தரங்களை அடைவதற்கு நாம் வெறும் ரமலானை மட்டும் எதிர்பார்த்துக் காத்திருந்தால் பின்னர் நமது வாழ்நாள் கழிந்து விடும். ஆனால், நமது நோக்கம் மற்றும் இலக்கை நம்மால் அடைய முடியாமல் போய் விடும். மாறாக, ஓராண்டு முழுவதும் செயல்கள் ஏதும் செய்யாமல் இருந்ததன் விளைவாக முதல் நாள் எங்கு நின்று கொண்டிருந்தோமோ அங்கேயே நாம் நிற்பவர்களாக இருப்போம்.

இந்த ரமலானில் நான் பல குத்பாக்களை வழங்கியுள்ளேன். தக்வா, துஆ மற்றும் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படுதல் அதிலும் குறிப்பாக இறை வணக்கத்திற்குரிய கட்டளை இருக்கிறது. அதுவே நமது வாழ்வின் நோக்கமாகும். அதே போன்று ஒருவர் மற்றவருக்குரிய உரிமைகளை வழங்குதல், அதன் பக்கம் கவனம் செலுத்துதல், உயர் தரமான நல்லொழுக்கங்களை வெளிப்படுத்துதல் போன்ற கட்டுக்கதைகளை உள்ளடக்கிய குத்பாக்களாக அவை இருந்தன. ஒவ்வொரு குத்பாவிற்குப் பிறகும் எனக்கு ஏராளமான நபர்களிடமிருந்து கடிதம் வந்தது. எங்களுக்கு நீங்கள் நினைவூட்டி விட்டீர்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் எங்களுக்கு இந்த விஷயங்களை நன்றாக புரிந்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்தது என்று அவர்கள் கூறினர். ஆனால், உங்களுக்கு பாக்கியம் கிடைத்தது சரிதான். ஆனால் இந்த விஷயங்களை நீங்கள் உங்களது வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்ளும் போதுதான் அது உங்களுக்கு பயனளிக்கக் கூடியதாக இருக்கும். நான் ஹதீஸ்களின் ஒளியில் உங்களுக்கு கூறியது போன்று ஒவ்வொரு ஜுமுஆவிற்கும் முக்கியத்துவம் உள்ளது. ஜுமுஆவின் முக்கியத்துவம் என்பது ரமலானில் வரக்கூடிய ஜுமுஆவோடு தொடர்புடையதும் அல்ல அல்லது ஜுமுஅத்துல் விதாவோடு மட்டும் தொடர்புடையது அல்ல. மாறாக, நிரந்தரமாக ஜுமுஆ தொழுகைகளைத் தொழுவதில் நமக்கு இருக்கும் கவனத்தில்தான் ரமலானின் முக்கியத்துவம் அடங்கியுள்ளது. அதே போன்று ஐவேளை தொழுகைகளின் பக்கமும் நமக்கு கவனம் இருக்க வேண்டும். மேலும், ஒட்டுமொத்த அளவில் ரமலானில் இறை வணக்கங்கள், தொழுகைகள் மற்றும் நன்மைகள் செய்வதில் ஏற்பட்ட ஆர்வத்தை நாம் கை விட்டு விடக்கூடாது என்பதை நமக்கு கற்றுக் கொடுப்பதற்காகவே ரமலான் நம்மிடம் வருகின்றது. அடுத்த ரமலான் வரை இந்த உணர்வுகளை நாம் பாதுகாக்க வேண்டும். நான் தொடக்கத்தில் ஓதிய திருக்குர்ஆன் வசத்தில் கூட அல்லாஹ் ஜுமுஆவின் முக்கியத்துவத்தைப் பற்றியே கூறியிருக்கின்றான். அந்த இறை வசனங்களின் பொருள் இதுவாகும்.

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் வெள்ளிக்கிழமையின் ஒரு பகுதியில் தொழுகைக்காக அழைக்கப்பட்டால் நீங்கள் அல்லாஹ்வை நினைவு கூறுவதற்கு விரைந்து செல்லுங்கள். வியாபாரங்களை விட்டு விடுங்கள். நீங்கள் அறிந்திருப்பின் இது உங்களுக்கு மிகச் சிறந்ததாகும்.

அடுத்த வசனத்தின் பொருள் இதுவாகும். தொழுகை நிறைவேற்றப்பட்டதும் பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வின் அருளைத் தேடுங்கள். நீங்கள் வெற்றி பெறுவதற்காக அல்லாஹ்வை மிகுதியாக நினைவு கூறுங்கள்.

அடுத்த வசனம் ஜுமுஆ அதிகாரத்தின் கடைசி வசனமாகும். அதில் அல்லாஹ் கூறுகின்றான்: அவர்கள் வியாபாரத்தையோ, கேளிக்கைகளையோ காணும்போது அதன் பால் ஈர்க்கப்பட்டு உம்மை தனித்து நிற்க வைத்து விடுகின்றனர். நீர் கூறுவீராக! அல்லாஹ்விடமுள்ளது கேளிக்கையை விடவும் வியாபாரத்தை விடவும் மிகச் சிறந்ததாகும். அல்லாஹ் மிகச் சிறந்த உணவளிப்பவன் ஆவான். **(62:10–12)**

எனவே, இங்கு ஜுமுஆவில் கலந்து கொள்வதன் பக்கம் சிறப்பாக கவனமூட்டப்பட்டுள்ளது. ஜுமுஆ தொழுகைக்கான பாங்கு ஓசையைக் கேட்டால் அல்லது இன்றைய நாட்களில் ஒவ்வொருவரும் கடிகாரம் வைத்திருக்கின்றார். ஜுமுஆவிற்குரிய நேரம் ஆகி விட்டால் தனது எல்லாப் பணிகளையும் வியாபாரத்தையும் விட்டு விட்டு ஜுமுஆவிற்கு வந்து விட வேண்டும். ஜுமுஆ குத்பா கூட தொழுகையின் ஒரு பகுதியே ஆகும். எனவே, அதில் சோம்பேறித்தனத்தைக் காட்டக் கூடாது. தொழுகை ஆரம்பமாவதற்கு முன் நாம் சென்று விடலாம் என்று எண்ணக் கூடாது. மாறாக, குத்பாவிற்கு வந்து சேர்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இங்கு நான் ஒரு முக்கியமான விஷயத்தையும் கூறிக் கொள்கின்றேன். இக்காலத்தில் அல்லாஹ் நமக்கு M.T.A என்ற ஒரு ஏற்பாட்டைத் தந்திருக்கின்றான். ஐரோப்பாவிலும், ஆப்பிரிக்காவின் சில நாடுகளிலும் ஜுமுஆவிற்கான நேரம் ஒன்றாகவே உள்ளது. எனவே, நேரம் ஒரே நேரமாக இருக்கும்போது காலத்தின் கலீஃபாவின் குத்பாவைக் கேட்க வேண்டும். இது நம்மீது அல்லாஹ்வின் மாபெரும் கருணையாகும். இந்த ஏற்பாட்டின் மூலம் அல்லாஹ் ஜமாஅத்தின் ஒற்றுமைக்கு மேலும் ஓர் ஏற்பாட்டை செய்திருக்கின்றான். எங்கு நேரங்களின் வித்தியாசம் உள்ளதோ அங்கும் கூட காலத்தின் கலீஃபாவின் குத்பா கேட்கப்படுதல் வேண்டும். நேரடி ஒளிபரப்பு கேட்க முடியவில்லை என்றாலும் ஒலிப்பதிவையாவது கேட்க வேண்டும். இவ்வாறு இந்தக் குத்பாவில் விரிவான மேற்கோள்களை எடுத்து, குத்பா கொடுக்கக்கூடிய முபல்லிக்மார்கள் மற்றும் முரப்பிகள் அதே நாளிலோ அல்லது அடுத்த நாளிலோ அல்லது அடுத்த ஜுமுஆவின் போதோ அந்த குத்பாவைப் படித்துக் காட்ட வேண்டும். மேற்குப் பகுதியின் பக்கம் நீங்கள் சென்றால் அங்கு காலை நேரமாக இருக்கும். அவர்கள் காலைப் பொழுதிலேயே என்னுடைய குத்பாவைக் கேட்டு விடுவார்கள். அவர்கள் அந்த நாளிலேயே அந்தக் குத்பாவை வாசித்துக் காட்ட முடியும். கிழக்கின் பக்கம் சென்றால் அங்கு பகல் பொழுது கழிந்திருக்கும். மாலைப் பொழுதாக இருக்கும் அல்லது பாதி பொழுது கழிந்திருக்கும். எனவே, அங்கு அடுத்த வாரம் அடுத்த ஜுமுஆவில் அதை வாசித்துக் காட்ட முடியும். ஜமாஅத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு இது மிகச் சிறந்த வழிமுறையாகும்.

இன்னும் கூறப்போனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தோடு இந்த ஜுமுஆவிற்கு மிக நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. அல்லாஹ் இந்தக் கண்டுபிடிப்பின் மூலமாக காலத்தின் கலீஃபாவின் குத்பாவை அதன் ஒரு பகுதியாக்கி விட்டான். உங்களுடைய உலகப் பணிகளை ஜுமுஆவிற்கு முன்போ அல்லது ஜுமுஆவிற்குப் பிறகோ கூட செய்ய முடியும். ஜுமுஆவின் நேரத்தில் அந்தப் பணிகளை விட்டு விட்டு ஜுமுஆவிற்கு நீங்கள் வந்தால் உங்களுடைய உலகப் பணிகளில் கூட அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாகி விடுவீர்கள். எனவே, எங்களுடைய பணிகள் பாதித்து விடும் என்ற எண்ணத்தில் எவர் ஜுமுஆவில் கலந்து கொள்ளாமல் இருக்கின்றாரோ அது முற்றிலும் தவறாகும். மாறாக, அது நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். எந்தவொரு வேலைக்கும் கனிகளைத் தருவது அல்லது அதில் பரக்கத்தை ஏற்படுத்துவது என்பது அல்லாஹ்வின் வேலையாகும். எனவே

நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வுடைய பேச்சைக் கேட்கவில்லை என்றால் அல்லாஹ் கூறுகின்றான்: உங்களுடைய பணிகளில் அபிவிருத்தி ஏற்படாது. நீங்கள் அல்லாஹ்வின் கூற்றை செவிமடுத்தால் பின்னர் அதில் பரக்கத்துகளும் ஏற்படும்.

அல்லாஹ் கூறுகின்றான்: இந்த உலக வியாபாரங்கள் மற்றும் கேளிக்கைகள் உங்களை ஜுமுஆ தொழுவதிலிருந்து தடுத்து நிறுத்தி விட வேண்டாம். குறிப்பாக இந்தக் காலத்தில் இவ்விஷயங்களை நாம் பார்க்கின்றோம். நான் கூறியது போன்று இக்காலத்திற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தோடு ஒரு சிறப்பான தொடர்பு இருக்கின்றது. எனவே, இன்று உங்களின் வியாபாரங்கள் வெறும் உள்ளூர் அளவிலான வியாபாரங்களாக இருக்கவில்லை. முந்தைய காலங்களில் உள்ளூர் அளவிலான வியாபாரங்கள் மட்டுமே நடந்து வந்தன. அவர்கள் வியாபாரத்திற்காக குழுக்களாக சென்றனர். ஆனால், குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு மட்டுமே அவர்கள் சென்று வந்தனர். இன்று உள்ளூர் அளவில் அந்த வியாபாரம் நடப்பதில்லை. மாறாக, உலக அளவிலான சர்வதேச அளவிலான வியாபாரங்களாக இருப்பதால் பணிகளும் அதிகமாக இருக்கின்றது. அதே போன்று உங்களுடைய கேளிக்கைகள் இருக்கின்றன. விளையாட்டுகள் இருக்கின்றன. ஏனைய பொழுதுபோக்கு அம்சங்கள் இருக்கின்றன. அதுவும் சர்வதேச அளவிலானதாக இருப்பதால் குறுகிய நேரத்திற்குள் முடிவதில்லை. ஆனால், எல்லா நிலையிலும் ஒரு நம்பிக்கையாளர் ஜுமுஆவின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதே ஒரு நம்பிக்கையாளருக்கு மிகவும் முதன்மையானதாக இருக்கின்றது. மேலும் இதுதான் ஒரு நம்பிக்கையாளரின் முன்னுரிமையாக இருக்கவும் வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நபித்தோழர்கள் அன்னாரின் பரிசுத்த ஆற்றலின் காரணமாக முழுமையான முறையில் தூய்மை பெற்றிருந்தார்கள். அவர்களுக்கு அல்லாஹ்வின் திருப்தியே எல்லாவற்றையும் விட முதன்மையானதாக இருந்தது. எனவே, அவர்கள் வியாபாரம் மற்றும் கேளிக்கைக்காக ஜுமுஆவை விட்டு விட்டார்கள் என்று நம்மால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. அது மட்டுமல்ல. அந்தக் காலத்தில் உள்ளூர் அளவிலான வியாபாரங்கள் மற்றும் விளையாட்டுகளை ஜுமுஆ தொழுகைக்கான நேரத்திற்கேற்ப மாற்றி அமைத்துக் கொண்டிருக்க முடியும். நிச்சயமாக இந்தக் கட்டளை நமது காலத்தைப் பற்றிய சித்திரமேயாகும்.

இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தைப் பற்றிய சித்திரமேயாகும். மார்க்க விஷயங்கள் பிற்படுத்தப்பட்டு உலக விஷயங்களுக்கே அக்காலத்தில் முன்னுரிமை வழங்கப்படும். 24 மணி நேரமும் வியாபாரம் மற்றும் கேளிக்கைகளில் மனிதன் மூழ்கியிருப்பான். உலக நாடுகளின் தூரம் குறைந்து விடும். வீட்டில் அமர்ந்தவாறே உலகின் பல்வேறு இடங்களில் நடக்கும் கேளிக்கைகளை எப்போதும் மனிதனால் கண்டு ரசிக்க முடியும். அல்லாஹ் கூறுகின்றான்: அதுபோன்ற காலத்தில் நீங்கள் உங்களது முன்னுரிமைகளைச் சரியாக வைத்துக் கொண்டால் நீங்கள் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாகி விடுவீர்கள். நிச்சயமாக அல்லாஹ்விடம் உள்ளது உலக வியாபாரங்களை விடவும், கேளிக்கைகளை விடவும் மிக மேலானதாகும். மேலும், அல்லாஹ் எல்லா வகையான செல்வங்களையும் வழங்கக்கூடியவன் ஆவான். அவனிடமிருந்தே எல்லா விதமான செல்வங்களும் மனிதனுக்கு கிடைக்கின்றன. அவனே உணவளிக்கக் கூடியவனும் ஆவான். நீங்கள் அவனது கூற்றுக்கு செவிமடுத்தவாறு உங்களது ஜுமுஆ தொழுகைகளைப் பாதுகாத்துக் கொண்டால் உங்களுடைய உலகியல் செல்வங்களிலும் அபிவிருத்திகளைப் பெறக் கூடியவர்களாக நீங்கள் இருப்பீர்கள்.

எனவே, இந்த முக்கியத்துவத்தை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட நமக்கு ஜுமுஆ தொழுகைகளை நிறைவேற்றுவதை ரமலானோடும் அல்லது ஜுமுஅத்துல் விதாவோடு மட்டும் தொடர்புடையதாகவும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட –தாகவும் அதனை ஆக்கிக் கொள்வது நமக்கு எந்த வகையிலும் ஆகுமானதல்ல.

ஜுமுஆவின் முக்கியத்துவத்தை மேலும் விளக்குவதற்காக நான் மேலும் சில ஹதீஸ்களை எடுத்து வைக்கின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜுமுஆவின் பரக்கத்களைக் குறிப்பிட்டவாறு ஒருமுறை கூறினார்கள். "ஜுமுஆ நாளன்று பள்ளிவாயில்களின் ஒவ்வொரு வாயிலிலும் மலக்குகள் இருப்பர். அவர்கள் பள்ளியில் முதலில் வந்தவரை முதலில் வந்தவர் என்று எழுதிக் கொள்வர். இவ்வாறு அவர்கள் வருகின்ற ஒவ்வொருவரின் தர வரிசைப் பட்டியலைத் தயார் செய்வார்கள். இமாம் தனது குத்பாவைக் கொடுத்து அமர்ந்து விடும்போது தனது பதிவேட்டை வானவர்கள் மூடி விடுவர்." (ஸஹீஹ் புகாரி கிதாபு பதவுல் ஹல்க் பாபு திக்ருல் மலாயிகதி ஹதீஸ் எண். 3211) தனது உலகியல் பணிகளின் காரணமாக எவர் கடைசியாக வருவாரோ அவர் இந்தப் பட்டியலில் கடைசி இடத்தையே பெறுவார். கடைசி இடத்தைப் பெறக் கூடியவருக்கு நற்கூலியும் குறைவாகவே கிடைக்கும். வேறு சில இடங்களில் அந்த நற்கூலியைப் பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. அதாவது, கடைசியாக வரக்கூடியவருக்கு கோழி முட்டை அளவிலான நற்கூலியே கிடைக்கும். மேலும் முதலில் வரக்கூடியவருக்கு ஒட்டகத்தின் அளவிற்கான நற்கூலி கிடைக்கும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஸஹீஹ் புகாரி கிதாபுல் ஜும்அதி பாபு ஃபஸ்லுல் ஜும்அதி ஹதீஸ் எண். 881)

நீங்கள் பள்ளிவாயிலில் முன்னாலேயே வந்து அமர்வதும், காத்திருப்பதும் நேரத்தை வீணாக்குவதாகும் எனக் கருதக் கூடாது என்பதற்காகத்தான் இந்த உதாரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. உண்மையில் எவர் முதலில் வருவாரோ அவருக்கு இந்தச் செயல்கள் நற்கூலியைப் பெற்றுத் தரக்கூடியதாக இருக்கும். மேலும், முதலில் வரக்கூடியவரை பின்னால் வரக்கூடியவரிலிருந்து வேறுபடுத்திக் காட்டக்கூடியதாக அந்த செயல் இருக்கும். முன்பாகவே வரக்கூடியவர் பள்ளிவாயிலில் அமர்ந்து இறைவனை நினைவு கூறுவார். அது நிச்சயமாக அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தரக்கூடியதாக இருக்கும்.

அதன் முக்கியத்துவத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: கியாமத் நாளன்று அல்லாஹ்வின் சந்நிதானத்தில் ஜுமுஆ நாளன்று வந்த தர வரிசைப் பட்டியலின் அடிப்படையில் மக்கள் அமர வைக்கப்படுவர். அதாவது முதலாவதாக வந்தவர், இரண்டாவதாக வந்தவர், மூன்றாவதாக வந்தவர் என்று வரிசைப்படி அமர வைக்கப்படுவர். அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: அதன் பிறகு நான்கவதாக வந்தவர் நான்காவதாக அமர்ந்திருப்பார். அவ்வாறு நான்காவதாக அமர்ந்திருப்பவர் கூட அல்லாஹ்வின் முன்னிலையில் அமர்வதன் அடிப்படையில் எவ்வகையிலும் தூரத்தில் இருப்பவராக ஆகமாட்டார். (சுனன் இப்னு மாஜா. கிதாபு இகாமத்துஸ்ஸலாத்தி வ சுன்னத்தி ஃபீஹா, பாபு மாஜாஅ ஃபித்தஹ்ஜிரி இலல் ஜும்அதி ஹதீஸ் எண். 1094)

இன்னொரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஜுமுஆ தொழுகைக்காக பள்ளிவாயிலுக்கு வருகை தாருங்கள். மேலும், இமாமிற்கு அருகில் அமருங்கள். ஒரு நபர் கடைசி வரிசையில் அமர்வதால் அவர் சொர்க்கவாசியாக இருந்தும் கூட சொர்க்கத்தை விட்டு பின் தங்கி விடுவார். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 6, பக்கம் 752, முஸ்னது அபில் ஜுஃதுஸ்ஸுமரி ஹதீஸ் எண். 15585, பைரூத்திலுள்ள ஆலமுல் குதுபில் 1998 -ல் வெளியிடப்பட்டது)

ஆக, இந்த ஹதீஸ்கள் எல்லாம் ஜுமுஆ தொழுகைக்கென்று முக்கியத்தும் இருக்கின்றது என்பதை நமக்கு கூறுகின்றது. ரமலானில் வருகின்ற ஜுமுஆ அல்லது ஜுமுஅத்துல் விதா அல்லது சாதாரண நாட்களில் வரக்கூடிய ஜுமுஆ என்ற வேறுபாடு இல்லாமல் எல்லா ஜுமுஆக்களுக்குமே முக்கியத்துவம் உள்ளது. சொர்க்கத்தில் பின்தங்கி விடுவது என்பதன் பொருள் என்னவென்றால், ஒரு நபர், தான் சொர்க்கத்திற்குரியவராக இருந்தும் கூட தனது சோம்பேறித்தனம் மற்றும் ஜுமுஆவிற்கு முக்கியத்துவம் வழங்காததன் விளைவாக அவர் சொர்க்கத்தையே இழந்தவராக ஆகி விடுவார். தன்னிடத்தில் வேறு சில சிறப்புகள் இருந்தபோதிலும் இந்தச் செயலின் காரணமாக அவர் சொர்க்கத்தை இழந்து விடுகின்றார் அல்லது அல்லாஹ்விடமிருந்து தன்னைத் தானே மிகவும் விலக்கிக் கொள்கிறார். ஜுமுஆவிற்குரிய முக்கியத்துவத்தை வழங்காததன் காரணமாக ஜுமுஆ தொழுவதில் இடைவெளி விட்டு விடுகின்றார்.

அதைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எச்சரிக்கை செய்கின்றார்கள். எந்த நபர் வேண்டுமென்றே தொடர்ந்து மூன்று ஜுமுஆக்களை விட்டு விடுகின்றாரோ அல்லாஹ் அவரது உள்ளத்தில் முத்திரை இட்டு விடுகின்றான். எவர்கள் ஜுமுஆவில் கலந்து கொள்வதை மேலோட்டமாக எடுத்துக் கொள்கின்றார்களோ அவர்களுக்கு இது ஒரு மிகப்பெரிய எச்சரிக்கையாகும். உள்ளத்தில் முத்திரையிடப்படுவதன் பொருள் என்னவென்றால், அதனால் அவர்களுக்கு எந்தவொரு நன்மையையும் செய்வதற்கு பாக்கியம் கிடைக்காது. அவர்கள் அல்லாஹ்வின் நேசத்தைப் பெறக்கூடியவர்களாகவும் ஆக முடியாது. ஒவ்வொரு ஜுமுஆவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது இந்த ஒவ்வொரு ஹதீஸிலிருந்தும் நமக்கு தெளிவாகின்றது. எனவே நாம் முழுமையாக முயற்சி செய்து ஜுமுஆவில் கலந்து கொள்ள வேண்டும். ஆனால், சிலருக்கு சில நிர்ப்பந்தங்கள் இருக்கும். அவர்களால் ஜுமுஆவிற்கு வர முடியாமல் போகலாம். அத்தகையவர்களுக்கு அல்லாஹ்வும் விதிவிலக்கு வழங்கியுள்ளான். அல்லாஹ் அநீதியிழைப்பவன் அல்லன். எந்த மக்கள் ஜுமுஆ தொழுகையிலிருந்து விதிவிலக்கு பெற்றவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் அடிமைகள், பெண்கள் குழந்தைகள் மற்றும் நோயாளிகள் ஆவர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். (சுனன் அபூதாவூது கிதாபுஸ் ஸலாத்து பாபுல் ஜும்அதி லில்முலூகி வல்மர்அத்தி ஹதீஸ் எண். 1067) இவர்களுக்கு ஜுமுஆ தொழுவது அவசியமானதல்ல. அவர்களுக்கு விதிவிலக்கு உள்ளது.

இங்கு நான் இன்னொன்றையும் தெளிவுபடுத்திக் கொள்கின்றேன். இன்னும் சொல்லப்போனால், சில பெண்கள் புகார் செய்கின்றார்கள். ஜுமுஆக்களில் உங்கள் பிள்ளைகள் சப்தம் போடுகின்றனர். எனவே, குழந்தைகளுடைய தாய்மார்கள் ஜுமுஆவிற்கு வர வேண்டாம் என்று ஜமாஅத் அமைப்பினர் எங்களைத் தடுக்கின்றனர் என்று சில பெண்கள் முறையிடுகின்றனர். இந்தப் பெண்கள் மற்றும் குழந்தைகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே விதிவிலக்கு பெற்றவர்கள் என்று கூறியுள்ளார்கள். எனவே எங்கு குழந்தைகளைத் தனியாக அமர வைப்பதற்கு ஏற்பாடு இல்லையோ அங்கு குழந்தைகளை வைத்துள்ள தாய்மார்கள் வர வேண்டாம். அதுவே சிறந்ததாகும். பொதுவாக பெண்களுக்கு ஜுமுஆ தொழுவது கடமையுமல்ல. ஆனால் ஆண்கள் மீது எல்லா நிலையிலும் ஜுமுஆ கடமையாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமும் ஒருமுறை பெண்கள் ஜுமுஆ தொழுவது பற்றி கேட்கப்பட்டது. அதற்கு அன்னார் கூறினார்கள்: எந்த விஷயம் சுன்னத் மற்றும் ஹதீஸிலிருந்து நிரூபணமாகி இருக்கின்றதோ அதற்கு அதை விட நாம் என்ன விளக்கம் வழங்கி விட முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண்களை ஜுமுஆ தொழுவதிலிருந்து விதிவிலக்கு பெற்றவர்களின் பட்டியலில் வைத்திருக்கும்போது ஆண்களுக்கு மட்டுமே ஜுமுஆ கடமையாக உள்ளது. (அல் பத்ர் 11 செப்டம்பர் 1903, பக்கம் 366, தொகுதி 2, எண். 34) எனவே ஆண்களுக்கு எல்லா நிலையிலும் கடமையாகும். அவர்கள் நோயாளியாக இருந்தால் அல்லது வேறு ஏதாவது ஆகுமான காரணங்கள் இல்லாத வரை அவர்கள் எப்படியும் ஜுமுஆவிற்கு வந்தே ஆக வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜுமுஆவின் முக்கியத்துவம் பற்றி கூறினார்கள்: அந்த முக்கியத்துவத்தின் அடிப்படையிலேயே அன்னார் 1895 – 1896 ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு ஜுமுஆ நாளன்று ஜுமுஆ

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 Thursday 4 AUGUST 2016 Issue No. 22

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

தொழுவதற்காக குறைந்தபட்சம் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கையை முன் வைத்து முஸ்லிம்களிடம் அதில் கையெழுத்தையும் வாங்கத் துவங்கினார்கள். ஆனால், அந்தத் தருணத்தில் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஒரு பிரசுரத்தை வெளியிட்டார். அதில் கூறினார். இது நல்ல வேலை தான். ஆனால் இந்த வேலை மிர்ஸா சாஹிபின் கைகளினால் நடக்கக் கூடாது. நாங்களே அதனை செயல்படுத்துவோம் என்று கூறினார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். எமக்கு பேருக்கும், புகழுக்கும் ஆசையில்லை. நீங்களே செய்து கொள்ளுங்கள் என்று கூறி தனது நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டார்கள். அதன் பின்னர் முஹம்மது ஹுஸைன் பட்டாலவிக்கோ அல்லது வேறு ஆலிம்களுக்கோ அந்தத் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்துவதற்கான பாக்கியம் கிடைக்கவில்லை. அவர்கள் அதற்கான முயற்சியும் செய்யவில்லை. (ஹஸ்ரத் மு.ஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் -ரலி- அவர்கள் எழுதியுள்ள திக்ரே ஹபீப் என்ற நூலிலிருந்து பக்கம் 42- 43, தலைப்பு: ஜுமுஆ தொழுகைக்காக விடுமுறை) ஆனால் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்திய வைஸ்ராயிற்கு மெமோரியல் ஒன்றை அனுப்பினார்கள். அதில் அவரின் சிறப்புகளை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். மற்ற முஸ்லிம்களின் உரிமையை நிலைநாட்டியதற்குரிய நன்றியையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதில் தெரிவித்திருந்தார்கள். அவர் லாஹூரில் பள்ளிவாயிலையும் முஸ்லிம்களுக்கு பெற்றுக் கொடுத்தார். அதேபோன்று வேறொரு பள்ளிவாயில் இருந்தது. அதை இரயில்வே துறையினர் ஆக்கிரமித்து வைத்திருந்தனர். அதையும் காலி செய்து முஸ்லிம்களிடம் அவர் திரும்ப ஒப்படைத்தார். அதற்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அக்கடிதத்தில் நன்றி தெரிவித்திருந்தார்கள்.

மேலும் தொடர்ந்து குறிப்பிட்டார்கள்: எந்தக் கைகளின் மூலமாக இந்தப் பணிகள் நடைபெற்றுள்ளதோ அதே கைகளின் மூலமாக இன்னொரு பணியும் நடக்க வேண்டும் என்று முஸ்லிம்கள் ஆசைப்படுகின்றனர். அந்த ஆசை என்னவென்றால், ஜுமுஆ நாள் ஒரு மகத்துவமிக்க இஸ்லாமியப் பண்டிகைக்கான நாளாகும். திருக்குர்ஆன் குறிப்பாக இந்த நாளை விடுமுறைக்கான நாளாக கூறியிருக்கின்றது. இதற்கென்று குறிப்பான ஒரு அதிகாரம் திருக்குர்ஆனில் இடம் பெற்றுள்ளது. அதன் பெயர் சூரா ஜுமுஆ ஆகும். அதில் முஸ்லிம்களுக்கு கட்டளை இடப்பட்டுள்ளது. ஜுமுஆ தொழுகைக்கான பாங்கு ஓசை கொடுக்கப்பட்டால் நீங்கள் உலகத்தினுடைய எல்லாப் பணிகளையும் நிறுத்தி விடுங்கள். மேலும் பள்ளிவாயில்களில் ஒன்று கூடி விடுங்கள். மேலும் ஜுமுஆ தொழுகையை எல்லா நிபந்தனைகளுடன் நிறைவேற்றுங்கள். எந்த நபர் அவ்வாறு செய்யமாட்டாரோ அவர் மிகவும் பாவம் செய்தவர் ஆவார். மேலும் அவர் இஸ்லாத்தை விட்டு வெளியேறுவதற்குரிய நிலையில் அவர் இருக்கின்றார் என்றும் கூறப்பட்டுள்ளது. எந்த அளவிற்கு ஜுமுஆவின் குத்பாவைக் கேட்பதற்கும், தொழுகைக்கும் வலியுறுத்தப்பட்டுள்ளதோ அந்த அளவிற்கு பெருநாள் தொழுகைக்குக் கூட வலியுறுத்தப்படவில்லை. இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் இஸ்லாம் தோன்றிய நாள் முதல் இஸ்லாத்தில் இந்த நாள் விடுமுறை நாளாகவே இருந்து வந்துள்ளது. இந்த நாட்டிலும் 800 ஆண்டுகளாக அதாவது எதுவரை இஸ்லாமிய ஆட்சி இருந்து வந்ததோ ஜுமுஆ நாளன்று விடுமுறை விடப்பட்டது.

அடுத்து அன்னார் கூறினார்கள்: இந்த நாட்டில் இந்து, கிறிஸ்தவம் மற்றும் முஸ்லிம் என மூன்று சமுதாயங்கள் உள்ளன. இந்துக்கள் மற்றும் கிறித்தவர்களுக்கு அவர்களின் மத சடங்குகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஞாயிற்றுக்கிழமை அன்று விடுமுறை வழங்கியுள்ளது. ஆனால் இந்த மூன்றாவது பிரிவாகிய முஸ்லிம்கள் தங்களது பண்டிகைக்குரிய அந்த தினத்திலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருக்கின்றார்கள்.

அடுத்து அன்னார் கூறினார்கள்: முஸ்லிம்களின் மீது செய்த மற்ற உபகாரங்களின் பட்டியலில் இந்த உபகாரத்தையும் சேர்த்துக் கொண்டால் அதாவது ஜுமுஆ நாளன்று பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் அது இந்த அரசாங்கத்தின் மாபெரும் உபகாரமாக அமையும்.

முஸ்லிம்களுக்காவும் இஸ்லாமிய கட்டளைகளின் கண்ணியத்தை நிலை நிறுத்துவதற்காகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடத்தில் காணப்பட்ட வலி மற்றும் வேதனையின் வெளிப்பாடு இதுவாகும்.

அடுத்து அன்னார் கூறினார்கள்: அரசாங்கம் இந்த நாளின் முக்கியத்துவத்தை நினைவு கூரும் வகையில் இந்த நாளை பொது விடுமுறையாக அறிவித்து விட வேண்டும். அது முடியாதபட்சத்தில் பாதி நாளாவது விடுமுறை வழங்க வேண்டும். அவ்வாறு செய்து விட்டால் பொதுவாக முஸ்லிம்களின் உள்ளத்தை மகிழ்ச்சியூட்டுவதற்கு இதை விட சிறந்த வேறு எந்தவொரு நடவடிக்கையும் இருக்க முடியாது. (அல்ஹகம் 24 ஜனவரி 1903, பக்கம் 6, தொகுதி 7, எண்.3)

இன்று பெயர்தாங்கி இஸ்லாமிய ஆலிம்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஆங்கிலேய கைக்கூலி என்று பழி சுமத்துகின்றார்கள். ஆனால், ஆங்கிலேய அரசாங்கத்திற்கு இஸ்லாமிய கட்டளைகளின் பக்கம் ஒரு நபர் கவனமூட்டினார் என்றால் அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்தான். வேறு எந்தவொரு முஸ்லிம் தலைவருக்கும் அதற்கான பாக்கியம் கிடைக்கவில்லை. ஏனென்றால், இக்காலத்தில் இஸ்லாத்தின் முக்கியத்தை உலகிற்கு வெளிப்படுத்துவதும், இஸ்லாத்தின் உண்மையான போதனையின்படி செயல்பட வைப்பதும் அன்னார் மூலமாகவே நடைபெற இருந்தது. மேலும் அல்லாஹ் அன்னாரிடமே அந்தப் பணியை ஒப்படைத்திருந்தான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களாக நாம் வாதிடுகின்றோம். நமது ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் இஸ்லாமிய போதனைகளின் உண்மை வெளிப்பட வேண்டும். இந்த ரமலான் எந்த பரக்கத்துகளை எடுத்துக் கொண்டு வந்ததோ மேலும் எந்த பரக்கத்துகளை விட்டு செல்கின்றதோ அதை நாம் நமது வாழ்வின் அங்கமாக்கிக் கொள்வோம் என்று நாம் உறுதிமொழி எடுக்க வேண்டும். நாம் வெறும் ஒரு மாதத்திற்காக மட்டும் இஸ்லாமிய போதனைகளின் செயல் வடிவமாக இருக்கக்கூடாது. மாறாக, நிரந்தரமாக காலத்தின் இமாமிடம் செய்த உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

இந்தக் காலக்கட்டம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய காலகட்டமாகும். மேலும் ஜுமுஆ அன்னாருடைய காலக்கட்டத்தோடு தொடர்புடையதாக இருக்கின்றது என்பதையும், நமது பொறுப்புகள் என்ன? என்பதையும் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ள கருத்துக்களை அவர்களின் சில மேற்கோள்களிலிருந்து நான் எடுத்து வைக்கின்றேன்.

ஓரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: இறைவன் எந்த மார்க்கத்தில் அருட்கொடைகளை நிறைவு செய்திருக்கின்றானோ அந்த மார்க்கத்தின் பெயர் இஸ்லாம் ஆகும். அந்த அருட்கொடையில் ஒன்று ஜுமுஆ நாளாகும். அந்த நாளன்று அருட்கொடைகள் முழுமை பெற்றன. அடுத்து எல்லா மார்க்கங்களின் மீதும் இஸ்லாம் மேன்மை பெறும் என்ற விஷயமும் கூட ஜுமுஆ நாளன்றே நடக்கும். அந்த ஜுமுஆ இப்போது வந்து விட்டது. ஏனென்றால், இறைவன் அந்த ஜுமுஆவை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடு சிறப்பானதாக ஆக்கி வைத்துள்ளான். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 183; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: "இந்த நாள் நற்பாக்கியம் பெற்றவர்களின் பண்டிகைக்கான நாளாகும். எவர் இதிலிருந்து பயன் பெறுகின்றாரோ அவரே அருளுக்குரியவர் ஆவார். என்னுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ள நீங்கள் நாங்கள் எதனைப் பெற வேண்டுமோ அதனை பெற்று விட்டோம் என்று ஆணவம் கொண்டு விடாதீர்கள். எவர்கள் காலத்தின் இமாமை மிகக் கடுமையான முறையில் எதிர்த்து பொய்ப்படுத்தி இறைவனை கோபமூட்டியுள்ளார்களோ அந்த எதிரிகளை ஒப்பிடும் போது நீங்கள் அருகிலும் பாக்கியம் பெற்றவர்களாகவும் இருக்கின்றீர்கள் என்பது உண்மைதான். மேலும், நல்லெண்ணத்தை கைக்கொண்டு இறைவனின் கோபத்திலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள கவலை கொண்டுள்ளீர்கள் என்பதும் உண்மைதான். ஆனால், மற்றோர் உண்மை என்னவென்றால், இறைவன் நிரந்தர வாழ்க்கைக்காக உருவாக்கியுள்ள அந்த நீரூற்றிற்கு அருகில்தான் நீங்கள் வந்துள்ளீர்கள். ஆயினும் அதிலிருந்து நீர் அருந்துவது இன்னமும் மீதமுள்ளது. அந்த நீரூற்றிலிருந்து நீங்கள் உங்களுடைய தாகத்தைத் தணித்துக் கொள்ள அல்லாஹ்வின் அருளை வேண்டியவாறு அதற்கான பாக்கியத்தையும் வேண்டுங்கள். ஏனென்றால் இறைவனை விட்டு விட்டு ஒன்றும் நடக்காது. எவர் இந்த நீரூற்றிலிருந்து நீர் அருந்துவாரோ அவர் ஒருபோதும் அழிவிற்குள்ளாக மாட்டார் என்பதை நான் நன்கறிவேன். அதன் தண்ணீர் வாழ்வளிக்கக்கூடிய தண்ணீராகும். அது மனிதனை நாசத்திலிருந்து காப்பாற்றுகின்றது. ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுகின்றது. அந்த நீரூற்றிலிருந்து நீர் அருந்துவதற்கான வழிமுறை என்ன? அந்த வழிமுறை என்னவென்றால், இறைவன் உங்கள் மீது சுமத்தியுள்ள இரண்டு உரிமைகளை நீங்கள் செலுத்த வேண்டும். முழுமையாக அதை செயல்படுத்த வேண்டும். அதில் ஒன்று இறைவனுக்குரிய உரிமையாகும். மற்றொன்று படைப்பினங்களுக்குரிய உரிமையாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 184; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, நாங்கள் பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றுபவர்களாக இருப்போம் என்று நாம் இன்று உறுதிமொழி எடுக்க வேண்டும். மேலும் ஒரு நம்பிக்கையாளரிடம் என்ன எதிர்பார்ப்பு உள்ளதோ அந்த எதிர்பார்ப்பிற்கேற்ப அல்லாஹ் மற்றும் படைப்பினங்களின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்வோம் என்றும் அல்லாஹ் எவ்வாறு நமக்கு கட்டளையிட்டிருக்கின்றானோ அதன்படி செயல்படுவோம் என்றும், எதனை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வெளிப்படுத்திக் கூறியுள்ளார்களோ அதனை செயல்படுத்துவோம் என்றும் ரமலானின் பரக்கத்துகளை நாம் எப்போதும் நமது வாழ்க்கையின் அங்கமாக்கிக் கொள்வோம் என்றும் நாம் உறுதிமொழி எடுக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad